மலர்-4 இதழ்-97 செப்டம்பர் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



## சகுனம் கூறும் தேங்காய்

ஆன்மிகமலர் mobile app GET IT ON Google Play

e- book

## புலிப்பாணி சித்தரின் நோயின் தன்மையை எடுத்துச் சொல்லும் நட்சத்திர சகுனங்கள்

www.aanmeegamalar.com e- magazine

e- magazine



# வீரபத்திரர்

- வீரபத்திரருக்கு கரையில்லா வெள்ளை நிற ஆடைகளே அணிவிக்கப்பட வேண்டும்.
- வீரபத்திரருக்கு தும்பைப்பூ மாலை சாத்தி வழிபட்டால், எதிரிகள் தொல்லைகளிலிருந்து காத்து, துன்பங்களை நீக்கி, நல்வாழ்வு அளிப்பார்.
- கோபத்தால் உஷ்ணமாக உள்ள வீரபத்திரரை குளிர்விக்க அவர் மேல் வெண்ணெய் சாத்தும் முறை வழக்கத்தில் உள்ளது. மதுரை மீனாட்சி ஆலய கம்பத்தடி மண்டபத்தில் அருளும் வீரபத்திரருக்கு இந்த பிரார்த்தனை விசேஷமாக செய்யப்படுகிறது.
- செவ்வாய்க்கிழமையன்று கடைப்பிடிக்கப்படும் விரதம் வீரபத்திரவிரதம் என போற்றப்படுகிறது. அன்று சிவந்த நிற பூக்களாலும், செஞ்சந்தனத்தாலும் வீரபத்திரரை வணங்க, வாழ்வு வளம் பெறும்.
- ஐப்பசி மாத வளர்பிறை அஷ்டமி, மகா அஷ்டமி என்று அழைக்கப்படும். அன்று தும்பைப்பூ, நந்தியாவட்டைப்பூ, மல்லிகை போன்ற வெண்ணிற மலர் களால் வீரபத்திரரை அர்ச்சித்து வெண்பட்டு சாத்தி வழிபட, அவரது திருவருள் கிட்டும்.
- ஆடிப்பூர நாளன்று வீரபத்திரருக்கு வெற்றிலை மாலை சாத்துவது குடும்ப நலன் கிடைக்க வழி கிடைக்கும்.

# தீய சக்திகளை விரட்டும்வழி

- எந்த ஒரு நல்ல காரியம் துவங்க வெளியில் செல்லும் பொழுது அருகில் உள்ள விநாயகருக்கு ஒரு தேங்காய் உடைப்பதும், பசுவிற்கு வாழை பழம் தருவதும் துவங்கும் காரியம் வெற்றியடைய செய்யும்.
- தொட்ட சிணுங்கி, முடக்கத்தான், துளசி, வில்வம், கத்தாழை போன்ற செடிகள் வீட்டில் வளர்த்தால் கண் படுத்தல், ஏவல், சூனியம், வினைகள் போன்ற தீய சக்திகள் எளிதில் வீட்டிற்குள் வராது.
- மயில் தோகை வீட்டில் வைத்து இருப்பது முருகனின் ஆசிகள் கிடைக்கும்.
- கோவில்களில் அபிஷேகத்திற்கு கறவை பசும் பால் மட்டும் தரவும், அல்லது இளநீரை தரவேண்டும், இவைகள் உங்கள் சந்ததி அனைவரின் பாபத்தையும் , சாபத்தை போக்கும் வல்லமை உடையது.

# மாங்கல்ய கயிறும் மஞ்சளும்

நம்முடைய சாத்திரப்படி திருமாங்கல்யத்தை எதற்காக மஞ்சள் கயிரில் அணிகிறார்கள், என்பதற்கான காரணத்தை முதலில் தெரிந்து கொள்வோம். ஜோதிடப்படி கயிறு என்பது கேதுவின் அம்சமாக சொல்லப்பட்டுள்ளது. அந்த கயிரை வைத்துதான் திருமாங்கல்யம் கட்டு கின்றோம். இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், கேது தரக்கூடிய பிரச்சனைகளை சரி செய்பவர் ‘குரு’. குருவின் அம்சமாக சொல்லப்படுவது மஞ்சள்.

ஆகவே, மஞ்சள் கயிறால் தாலியை அணிந்து கொண்டிருக்கும் பெண்கஎின் வாழ்க்கையும், அந்தப் பெண்ணை மணமுடித்த கணவரின் வாழ்க்கையும், சிறப்பாக இருக்கும் என்று சொல்கிறது சாஸ்திரம்.



# ஆன்மிக மலர்கள்

- வெள்ளை மிளகு, கடுகு, காய்ந்த வில்வ இலைகள், நாய் கடுகு (மிளகு) பால் சாம்பிராணி, கடுக்காய், காய்ந்த வேப்ப இலைகள், ஓமம், தான்றி காய், காய்ந்த மருதாணி இலை, மஞ்சள் இவைகளை நன்றாக கலந்து அம்மாவசை, பௌர்ணமி, வெள்ளிகிழமை போன்ற நாட்களில் தூபம் போடுவது சகல நன்மைகளை தரும், குல சாமிகளின் ஆசிகள் கிடைக்கும்.
- விநாயகருக்கு சாற்றிய அருகம் புல் மாலையை உதிர்த்து அதை நன்றாக காய விட்டு வியாழன், பௌர்ணமி அம்மாவசை அன்று தூபம் போடா தீய சக்திகள் இருந்தால் விலகி ஓடும் (விநாயகரின் மறுநாள் கலைகபடும் மாலை) இதை வியாபார இடத்திலும் செய்யலாம்.
- கொப்பரை தேங்காயை துண்டுகளாகி அதை தூபமாக பெருமாளுக்கு காண்பிக்க பெருமாளும் கருப்பு சாமியும் குலத்தை காப்பார்.
- ஒரே நாளில் 9 வகையான லிங்க மூர்த்திகளை தரிசனம் செய்ய சனிதேவரின் ஆசிகள் பெற்று, ஆயுள்தோஷம் நீங்கி ஆரோகியம் ஏற்படும்.
- பசு நெய்யை செப்பு பத்திரத்தில் (தாமிரம்) நிறைத்து கோவிலுக்கு தர்மம் செய்தால் வம்ச சாபம் விலக வழிகளை தெரிய படுத்தும்.



# சகுனம் கூறும் தேங்காய்

- தேங்காய் முடிபாகம் சிறியதாக வட்டமாய் உடைந்தால், செல்வம் சேரும்.
- சரிசமமாக உடைந்தால், துன்பம் தீரும், செல்வம் பெருகும்.
- மூன்றில் ஒரு பங்காக உடைந்தால், ரத்தினம் சேரும்.
- ஐந்தில் ஒரு பங்காக உடைந்தால், அழியாத செல்வம் உண்டாகும்.
- சிறு சிறு துண்டுகளாக உடைந்தால் செல்வம், செல்வாக்கு, ஆபரண லாபம் உண்டாகும்.
- ஓடு தனியாக கழன்றால், துன்பம் வரும்.
- நீளவாக்கில் உடைந்தால், தனம் அழிந்து துன்பம் உண்டாகும்.
- உடைக்கும் பொழுது கைபிடியில் இருந்து தவறி கீழே விழுந்தால் குடும்பத்தில் துன்பம் மற்றும் பொருள் இழப்பு ஏற்படும்.
- முடி பாகம் இருகூறானால் தீயினால் பொருள் சேதமாகும்.
- ஆலயத்தில் தெய்வத்திடம் வேண்டி கொண்டிருக்கும்பொழுது தேங்காய் உடைக்கும் சத்தம் கேட்டால், வேண்டும் காரியம் உடனே வெற்றியைத் தரும்





# மாயமாய் மறையும் சித்த கலை

புராணக்கதைகளில் மனிதர்கள் தங்கள் உடலை மறைத்துக் கொள்ளும் பல்வேறு சம்பவங்களை கேள்விப்பட்டிருப்போம்.

சித்தர்கள் பலர் மக்களிடமிருந்து விலகி யிருக்க தங்கள் உடலை மறைக்கும் சித்த கலையை பயன் படுத்துவார்கள் என்பது கேள்விப்பட்டிருப்போம்.

சித்தர் நினைத்த மாத்திரத்தில் விரும்பிய உருவம் எடுத்திடக் கூடியவர்கள் என்பது காலம் காலமாய் இருந்து வரும் ஒரு கருத்தாகும். இதை ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நம்மிடம் வலுவான ஆதாரங்கள் இல்லை.

அடிப்படையில் சித்தர்கள் தனிமை விரும்பி களாய் இருந் திருக்கின்றனர். இதனை அவர்களின் பல பாடல்களின் மூலமாக நாம் அறிய முடிகிறது. தங்களின் தேடலுக்கு இடைஞ்சல் வருவதை விரும்பாததன் பொருட்டே அவர்கள் மக்கள் வாழ்விடங்களை விட்டு விலகி காடுகளிலும், மலைகளிலும் தனித்திருந்தனர். தங்களைச் சாராத பிறரின் கவனத்தில் இருந்து விலகி இருப்பதையே விரும்பி யிருக்கின்றனர்.

இவையெல்லாம் உண்மையா என்று எண்ணத் தோன் றும். இந்த மறையும் வித்தையை நமது சித்தர்கள் பல நூல்களில் விரிவாக எழுதியும் வைத்துள்ளனர். ஆனால் முழுமையான தமிழ் மொழியை அறிந்துகொள்ளும் ஆற்றல் நம்மிடம் இல்லாததாலும், அவற்றை புரிந்து கொள்ளும் திறமை இல்லாததாலும் சித்தர்களின் பாடல்களில் உள்ள கருத்தை அறிந்து கொள்ள முடியாமல், ஒருசிலவற்றை சந்தேகத்துடன் மனிதர்கள் பார்க்கின்றனர்.

இது போன்ற நம்ப இயலாத செயல்களை பொதுவில் ஜாலவித்தைகள் என்கின்றனர். இந்த ஜால வித்தைகளின் பின்னாலிருக்கும் அறிவியல் ஆய்வுக்கும் விவாதத்திற்கும் உரியது. அத்தகைய ஒரு ஜால வித்தையை பார்ப்போம்.

ஒருவரை நாம் கண்டே பிடிக்க முடியாவிடில், அவன் மாயமாய் மறைந்து விட்டான் என உவமையாகச் சொல்வது வழக்கம். மற்றபடி நமது புராணக் கதைகளின் ஊடே ஒரு இடத்தில் இருந்து சட்டென மறைந்து வேறு இடத்தில் தோன்றுதல் போன்ற பல குறிப்புகளை காண முடிகிறது.

நிஜ வாழ்க்கையில் இதெல்லாம் சாத்தியமா?

சாத்தியமே என்கிறார் அகத்தியர். "அகத்தியர் பரி பூரணம்" என்னும் நூலில் இது பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கிறது. ஆமாம்.. நினைத்த மாத்திரத்தில் நமது உருவத்தை மறைத்துக் கொள்ள உதவிடும் அஞ்சன மை ஒன்றைப் பற்றி கூறியிருக்கிறார்.

அதை எப்படி தயார் செய்வது?

சித்தியுள்ள அஞ்சனந்தா னொன்றுகேளு
 திறமான தேவாங்கு காமரூபி
பத்தியுள்ள கருக்குருவி மூன்றின்பிச்சும்
 பாலகனே ஒன்றாக கருக்கிக் கொள்ளு
சுத்தமுள்ள முட்டோட்டி லிட்டுக்கொண்டு
 சூதுகப டில்லாமல் வருக்கும்போது
பத்தியுடன் தானுருகி மையாய்நிற்கும்
 மார்க்கமுடன் கல்வமதில் வைத்துக்காணே

❖❖❖

காணவே பேரண்டத் தயிலம்விட்டு
 கடைந்தெடுக்கும் போதிலிருக்
கண்ணிற்காணும்
ஊணவே ஓம்கிலிரங்ரங் கென்றேதான்
 உத்தமனே தான்செபித்து வழித்துக்கொண்டு
பேணவே மதகரியின் கொம்பில்வைத்து
 பிலமான சிமிழதனைப் பதனம்பண்ணி
பண்ணியந்த மையெடுத்துத் திலதம்போட்டு
 கண்ணிறைந்த காட்சியிலே நின்றால்மைந்தா

❖❖❖

காசினியி லுனதுருவைக் காணமாட்டார்
 புண்ணியனே மனதுகந்த யிடத்தில்நின்று
போதமுடன் ஞானநெறி தன்னைப் பாரு
 தன்னருளைத் தனதாகப் பார்த்துப்பின்பு
சங்கையுடன் திலதமதை யெடுத்துப்பாரே
 என்னசொல்வேன் உனதுரு கண்ணிற்காணும்

– அகத்தியர்

❖❖❖

தேவாங்கு, காமரூபி, கருக்குருவி ஆகியவற்றின் பிச்சுக்களை ஒன்றாக எடுத்து கருக்கிக் கொள்ள வேண்டுமாம். பின்னர் அதனை சுத்தமான முட்டை ஓட்டில் சேகரித்து வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டுமாம். அப்போது அவை உருகி மை போலாகி இருக்கும் என்கிறார் அகத்தியர். இந்த மையை கல்வத்தில் இட்டு பேரண்டத் தயிலம் சேர்த்து கடைய வேண்டுமாம்.

கடைந்த பின் அதனை வழித்து எடுத்து, யானைத் தந்ததால் ஆன சிமிழில் சேகரித்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இப்படி சேகரம் செய்யும் போது "ஓம் கிலி ரங் ரங்" என்ற மந்திரத்தினை செபித்துக் கொண்டே செய்திட வேண்டுமாம்.

உருவத்தை மறைக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும் போது, சிமிழில் இருந்து மையை எடுத்து திலகமாக இட்டுக் கொள்ள உலகில் உள்ள யாரும் உருவத்தைக் காண முடியாது என்கிறார். பின்னர் மனதுக்கு பிடித்த இடத்திற்கு சென்று யோகம் தவம் போன்றன செய்து தன்னை அறிந்து கொள்ள கூறுகிறார். இந்த திலகத்தை அழித்து விட்டால் உருவம் பிறர் கண்களுக்குத் தென்படத் தொடங்கிவிடும் என்கிறார்.

இதுபோன்ற பல்வேறு சித்துக்களை நமது சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர், ஒருசில சித்துக்களை வெளிப் படையாக எழுதியும் வைத்துள்ளனர். நமது சித்தர்கள் பாடல்கள் முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால் பல்வேறு ஆச்சரியமூட்டும் விஷயங்கள் தெரிய வரும்.

## மகாபாரதக் காலத்தில் விதுரராக பிறந்து, சாபத்தை நிவர்த்தி செய்து கொண்ட

# எமதர்மராஜன்

திருதராஷ்டிரா மற்றும் மகராஜா பாண்டுவின் ஒன்று விட்ட சகோதரர் விதுரர் ஆவார்.

விஜித்திரவீர்யா என்ற மன்னன் தனக்கு வாரிசு இல்லாமலேயே உயிர் இழந்தான். அவரது மாபெரும் ராஜ்யத்தை ஆள தகுதியான ராஜ குழந்தை இல்லை என்பதினால் அவரது மனைவிகளான அம்பிகா மற்றும் அம்பாலிகா என்பவர்களுக்கு தமது யோக சக்தியினால் (அக்காலத்திலேயே டெஸ்ட் டியூப் குழந்தைமுறை) குழந்தைப் பேறு தருமாறு சத்யவதி வியாசரிடம் வேண்டிக் கொண்டாள்.

### திருதராஷ்டர்:

முதலில் வியாசரிடம் சென்ற அம்பிகா அவருடைய கோபமான முகத்தைக் கண்டு நடுங்கி விட்டு கண்களை மூடிக் கொண்டாள். இதனால் அந்தக் குழந்தையை பிறவியிலேயே குருடரான திருதராஷ்டகராக பிறந்தது.

### பாண்டு:

அடுத்து அம்பாலிகா பயத்தினால் கண்களை மூடிக் கொள்ளவில்லை என்றாலும் பேய் அறைந்ததுபோல ஒருவித நடுக்கத்தில் இருக்க அவள் உடல் ரத்தமற்ற உடலைப் போல தெரிந்தது. ஆகவே அவளுக்கு பிறந்த குழந்தை சக்தி அற்றவராக பாண்டுவாக பிறக்க வைத்தார்.

இந்த குறைபாடுடன் பிறந்த குழந்தைகள் ராஜ்யத்தை ஆளத் தகுதி இல்லாமல் இருக்க சத்யவதி நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டு வியாசரிடம் மீண்டும் அவர்களுக்கு நல்ல குழந்தையைத் தருமாறு வேண்டிக் கொண்டாள்.

### விதுரர்:

ஆனால் அம்பிகாவும், அம்பாலிகாவும் மீண்டும் வியாசரிடம் செல்ல பயந்து, தமது வேலைக்காரியை அவரிடம் அனுப்ப, விதுரரின் யோக சக்தி மூலம் அந்தப் பணிபெண் பெற்ற குழந்தையே விதுரராக பிறக்க நேரிட்டது.

### விதுரர் பிறப்பும் சாபமும்:

பணிப்பெண் ஒருவருக்கு விதுரர் மகனாகப் பிறக்க நேரிட்டதற்கும் ஒரு காரணம் இருந்தது. தர்மத்தின் மறு உருவமாகவே விதுரர் திகழ்ந்தாலும், மனிதனாக பிறந்து நூறு ஆண்டுகள் பூமியில் வாழ வேண்டும் என்ற சாபத்தை போக்கிக் கொள்ள ஏற்பட்ட பிறப்பே விதுரர் பிறப்பாகும். எமதர்மராஜனின் மறு பிறப்புதான் விதுரர்.

### எமதர்மர் பெற்ற சாபம்

மாண்டவ்ய முனிவர், ஒரு வனத்தில் தனது குடிலுக்கு வெளியில் மௌன விரதம் பூண்டு பல காலம் தவத்தில் ஆழ்ந்து இருந்தார்.

அந்த வனத்தின் அருகில் இருந்த ஒரு அரண்மனையில் புகுந்த திருடர்கள், விலையுயர்ந்த நகைகளை திருடிக்கொண்டு அந்த வனத்தின் வழியாக தப்பி சென்றனர், அவர்களை துரத்தி வந்த காவலர்கள், வனத்தின் பெரும்பாலான இடத்தில் தேடியும் திருடர்களை கண்டுபிடிக்கமுடியவில்லை.

திருடர்கள் தாங்கள் திருடி வந்த நகைகளை மாண்டவ முனிவரின் குடிலுக்கு அருகில் ஒரு இடத்தில் மறைத்துவைத்துவிட்டு, பிறகு வந்து எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் தப்பித்து விட்டனர்.

திருடர்களையும் நகையை தேடி வந்த காவலர்கள் மாண்டவ முனிவர் குடிலுக்கருகில் இருந்த நகைகளை கைப்பற்றினர், திருடர்களைப் பற்றி மாண்டவ்ய முனிவரிடம் விசாரிக்கும்போது, தனது மௌன விரதத்தைக் கலைக்க விரும்பாமல் தியானத்தில் ஆழ்ந்திருந்தார் மாண்டவ்ய முனிவர். இதனால் கோபம் அடைந்த காவலர்கள், இவருக்கும் திருடர்களுக்கும் தொடர்பிருக்கலாம், அதனால்தான் இவர் திருடர்களை காட்டிக்கொடுக்காமல் பாதுகாக்க நினைக்கிறார், இவருக்கு சரியான தண்டனை தரவேண்டும் என்று கூறி, முனிவரை கழு மரத்தில் ஏற்றி விட்டனர்.

கூர்மையான நுனியைக் கொண்ட கட்டையில் சொருகியதினால் அவரால் அதில் இருந்து தப்பிக்கவும் முடியவில்லை. அதில் அமர்த்தப்பட்ட முனிவரின் தியானம் கலைந்தது. உடல் வேதனைப்பட்டாலும் வலியால் துடித்தாலும் தமது தவ வலிமையினால் அவற்றைப் பொறுத்துக் கொண்ட மாண்டவ்ய முனிவர் தன்னை வேண்டும் என்றே எமராஜன் கொடுமைப் படுத்தி விட்டதாகக் கருதி, தன் உடலில் புகுந்துள்ள கட்டையுடன் இரத்தம் சொட்டச் சொட்ட எமதர்மரிடம் நேரில் சென்று அதற்கான காரணத்தைக் கேட்டார்.

எமராஜரும் மாண்டவ முனிவர் முன் பிறவியில், தம் இள வயதில், சிறு சிறு பிராணிகளை ஊசிகளால் குத்தி கொன்றதினால்தான் இந்த ஜன்மத்தில் அவருக்கு அதற்கேற்ப தண்டனை தந்ததாகக் கூறினார்.



எமதர்மராஜனின் இந்த பதிலால், முனிவர் கோபமடைந்தார். பூர்வ ஜென்மத்தில் சிறு வயதில் அறியாமையினால் செய்த பிழைக்கு இந்த ஜென்மத்தில் அவருடைய முதுமையையும், வயதையும் கூடப் பார்க்காமல் கொடுமையாக தண்டித்ததற்கு கண்டனம் தெரிவித்து, எமதர்மராஜா தம் கடமையை நீதிப்படி செய்யவில்லை என்று கூறினார்.

நியாயமற்ற செயலை செய்த எமராஜர் கடுமையான மனவேதனை அடையும் வகையில் மனிதப் பிறவி எடுக்க வேண்டும் என சாபமிட்டார். மாண்டவ முனிவரின் சாபத்தை நிவர்த்தி செய்ய, எமதர்மராஜா பூமியில் அரச வம்சத்தில் பிறக்காமல், ஆனால் அரச வம்ச தொடர்பில் பிறந்து, மற்றவர்கள் இவரை உதாசினப்படுத்தி, அதனால் மன வருத்தம் அடையும் விதத்தில் கிருஷ்ண அவதாரக் காலத்தில், தானும் பூமியில் ஒரு பணிப்பெண்ணிற்கு மகனாகப் பிறந்தார்.

கிருஷ்ண அவதாரக் காலத்தில், விதுரராகப் பிறந்து பலரால் உதாசீனப்படுத்தப்பட்டு, தன் கடைசி கால கட்டம் வரை அவர் மன நிம்மதி இன்றி மெல்ல மெல்ல மடிந்தாராம். அவர் மரணத்துடன் யமதர்மராஜரின் முந்தைய சாபமும் முடிவுற்றது.

## ரமணர் வாக்கு



- மௌனமாக இருப்பது மிகவும் நல்லது. அது ஒரு விரதம் தான். ஆனால் வாயை மட்டும் மூடிக் கொண்டு மனம் அலைபாய்ந்து கொண்டிருக்குமானால் அது மௌனமாகாது. அதானால் எந்தப் பயனும் இல்லை.
- சாதனைக்கு தேவை சத்துவ உணவும் நல்ல சத் சங்கமுமே!. மாமிச உணவு கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். மற்றபடி வேறு விதிகள் என்று எதுவும் இல்லை.
- கடவுளை ஒவ்வொருவரும் அவர்களு டைய இதயத்தில் தேடினால், கடவுள் அருளும் அவர்களை நிச்சயம் தேடும்.
- கர்த்தா ஒருவன். நாமெல்லாம் அவன் ஏவலுக்கு ஆட்பட்ட கருவிகளே! இதனை ஒவ்வொருவரும் உணர்ந்தால் பணிவு வராமல் போகாது.
- தீமைகளைச் செய்யாதீர்கள். புதிய வாசனைகளைச் சேர்த்துக் கொள்ளாதீர். தேவையற்ற சுமைகளைச் சுமக்காமல் இருங்கள்.
- மனதை எண்ணங்களிலிருந்து விடுவிப்பதே சாதனையின் நோக்கமாகும்.
- குருவே ஈசுவரன். ஈசுவரனே குரு. கடவுளே குருவாய் வரும் நிலையும் உண்டு.
- தியானத்தில் ஆன்ம தியானம் எனப்படுவதே சிறந்தது. அது சித்தியானால் மற்ற தியானங்கள் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஒவ்வொருவருடைய மனப் பக்குவத்திற்கு ஏற்றவாறு தியான முறைகளைக் கை கொள்ள வேண்டும்.
- உணர்வு ஒருமைப்பட்ட தியானத்தின் போது சில வகை ஒலிகள் கேட்கும். காட்சிகள் தெரியும். ஓர் ஒளி ஊடுருவது போல் தோன்றும். ஆனாலும் இவற்றில் மயங்கி தன்னிலை இழந்து விடாமல் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.
- மந்திரங்களை இடைவிடாது சொல்வதால் மனம் அடங்கும். பின் மந்திரம், மனம், மூச்சு என எல்லாம் ஒன்றே என்று ஆகும்.
- ஆத்ம விசாரமே தவம், யோகம், மந்திரம், தவம் எல்லாம். ஒருவன் தான் யார் என்று அறிந்து கொள்ளத்தான். அதுவே மிகவும் முக்கியம்.
- இறைவனை, ஞானத்தை ஒவ்வொருவரும் முயன்றுதான் அடைய வேண்டும். There is no any Short Routes to Reach the Feet of God.

# 'உள்ளதிற்கு' எதிராக ஏன் போராடுகிறீர்கள்?



நான் வசிக்கின்ற வீடு சத்தம் நிறைந்ததாக, அழுக்கு படிந்ததாக இருக்கலாம், மேஜை நாற்காலிகள் கவர்ச்சியற்று இருக்கலாம். அனைத்து விஷயங்களிலும் அழகின் பற்றாக்குறை இருக்கலாம்; இருப்பினும், பல்வேறு காரணங்களுக்காக நான் அங்கு வாழ வேண்டியிருக்கலாம், என்னால் வேறு வீட்டிற்கு செல்ல முடியாத நிலை இருக்கலாம்.

இப்படி இருக்கும்போது, இதனால் ஏற்படும் மனப் பிரச்சினையை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு பதிலாக, நிதர்சனத்தை உள்ளபடி பார்க்கும் ஒரு மனநிலையுண்டு.

'உள்ளதை' நான் உள்ளபடி பார்க்கவில்லை என்றால், பொருட்களைப்பற்றி,நாற்காலிமேஜை,சுவற்றிலுள்ளபடத்தை பற்றி அதிருப்தி மனப்பான்மையை கொண்டிருப்பேன். பின்பு, அதைப்பற்றியே ஓயாமல் நினைத்துக்கொண்டு மனதினால் வெறுப்படைவேன். அதனால், அந்த மனக்கசப்பை பிறரிடமும், வேலையிடத்திலும், இன்னபிற இடங்களிலும் வெளிக்காட்டுவேன்.

மனதில் நிகழும் இதுபோன்ற ஓயாத வெறுப்பான எண்ணவோட்டத்தையோ அல்லது வேறு பிரச்சினை செயல்படுவதையோ, முழுவதுமாக கண்காணித்து விழுப்புணர்வாக இருந்தால் மட்டுமே மனப்பிரச்சினையிலிருந்து விடுபட முடியும்.

பிளவுபடாத விரிந்த விழிப்புணர்வுடன் இருப்பதற்கு, பிரச்சினையை குறித்து குறை கூறுவதோ நியாயப்படுத்துவதோ இல்லாமல், எதையும் தெரிவுசெய்யாததோர் விழிப்புணர்வு இருக்க வேண்டும்.

அத்தகைய விழிப்புணர்வு இருப்பதற்கு, பரந்த பொறுமையும் நுண்ணிய உணர்திறனும் தேவைப் படுகிறது; அதற்கு தீவிர ஆர்வமும், இடைவிடாத தொடர்ந்த கவனமும் தேவைப்படுகிறது. இதனால், ஒட்டுமொத்த சிந்தனை செயல்முறையும் அவதானிக்கப்பட்டு புரிந்து கொள்ளப்படுகிறது.

– ஜே கிருஷ்ணமூர்த்தி

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# ஸ்ரீ பலராமர்

வசுதேவருக்கும் ரோஹிணிக்கும் ஆதிசேஷனின் அம்சமாக பிறந்தவர் பலராமர். இவர் மஹாவிஷ்ணுவின் 8ஆவது திருஅவதாரம். மக்களிடம் அதிகம் பேசப்படாத ஒரே தசாவதாரம். அதற்கு காரணம் பல பல. பகவான் ஸ்ரீ நாராயணர் ராமாவதாரத்தில் லட்சுமணனின் சேவைக்கு தன்னுடைய நன்றி கடனை தீர்ப்பதற்காக தன்னுடைய க்ருஷ்ணாவதாரத்தில் ஆதிசேஷனை தனக்கு ஜேஷ்டனாக பிறக்க வைத்து சேவைகள் புரிந்து தன்னுடைய நன்றி கடனை தீர்த்தார்.

வைகாசி மாத சுக்கில பட்ச திருதியை திதியில், கிருஷ்ணருக்கு மூத்தவரான ஹலாயுதன், சங்கர்ஷணன் (பலராமன்) தோன்றினார்.

வைசாகே சுக்லபக்ஷே து த்ருதீயாயாம் ஹலாயுத:

சம்கர்ஷணோ பலோ ஜக்ஞே ராம:

க்ருஷ்ணாக்ரஜோ ஹரி:

இவர் பலதேவர், பலபத்திரர், சங்கர்ஷணர், ஹலாயுதன் என்று பல திருநாமங்களில் அழைக்கப்படுகிறார். இவர் வெண்ணிற தோற்றத்தில் அபார தேஜஸுடன் இருப்பார். மிகுந்த பலசாலி உலகையே தாங்கும் ஆதிசேஷனின் அம்சாவதாரம்.

உலகையே காத்து ரக்ஷிக்கும் ஸ்ரீமன் நாராயணனையே தாங்கும் வல்லமை படைத்தவர் ஆதிசேஷனான ஸ்ரீ பலராமர். பலராமரின் முழு பராக்கிரமத்தை அறிந்தவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒருவர் மட்டுமே. அதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ பலராமரிடம் சற்று அனுசரித்தே செல்வார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகையில் அரசாட்சி புரியும் பொழுது பலராமனை கலந்து ஆலோசிக்காமல் எந்த ஒரு முடிவையும் எடுக்க மாட்டார், அண்ணனிடம் மிகுந்த மரியாதையும், நன்மதிப்பும் வைத்து இருந்தார். கிருஷ்ணரும் பலராமரும் இரண்டு ரூபங்களுடனும் இரண்டு வேறுபட்ட பாவங்களுடனும் வீற்றுள்ள ஒரே முழுமுதற் கடவுள். இவரின் சகோதரி சுபத்ரா தேவி. இவரது மனைவியின் பெயர் ரேவதி. மகள் வத்ஸலா. தன்னுடைய மகளை அபிமன்யுவிற்கு மணம் முடிக்கிறார்.

த்ரேதா யுகத்திலே இராமாவதாரத்தின் போது இலஷ்மணனாக அவதரித்து இராமருக்கு சேவை செய்தார், துவாபர யுகத்தி’லே அவரே பலராமராக அவதரித்தார். இந்த கலியுகத்திலே நாம் எல்லோரும் உய்யவும் விசிஷ்டாத்வைதம் உலமெங்கும் பரவ ஸ்ரீ ராமானுஜராக திருஅவதாரம் புரிந்தார்.



பிருந்தாவனத்தில், ஆயர்பாடியிலும் ஸ்ரீ கிருஷ்ண பலராம லீலைகள் தெவிட்டாத புண்ணிய சரிதங்கள். தேனுகாசுரன், பிரலம்பன், மயிந்தன், ருக்மி மற்றும் பல முக்கிய அசுரர்களை அழித்து மக்களை காத்ததில் இவருக்கு பெரும் பங்கு உண்டு.

மகாபாரத்தில் பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதை பயிற்சி கற்று கொடுத்தவர்.

கிருஷ்ணனின் மைந்தனான சாம்பனை சிறை மீட்டு மீண்டும் ஸ்ரீ க்ருஷ்ணனரிடம் அளித்தவர்.

கையில் கலப்பை வைத்து இருப்பதால் விவசாயிகளின் முன்னோடியாக கருதப் படுகிறார்.

துரியோதனன் பலராமரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான். இதையறிந்த ஸ்ரீ கிருஷ்ணர், பலராமரை புண்ணிய க்ஷேத்ராடனம் அனுப்பி மஹாபாரத யுத்தத்தில் கலந்து கொள்ள முடியாமல் செய்தார். கிருஷ்ணரின் தேர்ந்த ராஜதந்திரம்.

ஸ்ரீ மத்வ சம்பிரதாயத்தில் ஸ்ரீமன் நாராயணர், சதுர்முக பிரம்மா, கருட, சேஷ, ருத்ர என்று தாரதம்ய முறைப்படி வணங்குவர். இந்த தாரதம்யத்தில் சேஷ என்பது சங்கர்ஷணராகிய ஸ்ரீ பலராமரையே குறிக்கும்.

சங்கர்ஷணரின் அம்ச அவதாரமாக ஸ்ரீ ஸ்கந்தன் மத்வ சம்பிரதாயத்தில் வணங்கப் படுகிறார். இன்றும் கர்நாடக மாநிலத்தில் சேஷனாக குமாரசுவாமி வணங்கப்படுகிறார். அதில் மிக முக்கியமான திருக்கோயில் ஸ்ரீ சுப்ரமண்யா இங்கு ஸ்ரீ நாகராக முருகப்பெருமான் அருள்புரிகிறார். வாசுகி என்னும் பாம்பிற்கு அடைக்கலம் அளிக்கும் சேஷனாக முருகன் அருள்பாலிக்கிறார்.

யதுகுலம் முடிவுற்றதையும், க்ருஷ்ண அவதாரம் முடியப்போவதையும் உணர்ந்த பலராமர் யோகநிலையில் அமர்ந்தார். யோகத்தின் துணைக்கொண்டு தன் உடலை அழித்து வெள்ளை பாம்பாய் உருக்கொண்ட அவர் ஆத்மா கடலில் கலந்தது. தன் அண்ணனான பலராமனுக்கு சடங்குகள் செய்வித்து க்ருஷ்ணரும் வேடன் இட்ட அம்பால் தன் அவதாரத்தை முடித்துகொண்டார்.

பலராமர் காயத்ரி

ஓம் ஹலாயுதாய வித்மஹே
மஹாபலாய தீமஹி
தன்னோ பலராம ப்ரசோதயாத்

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# புலிப்பாணி சித்தரின் நோயின் தன்மையை எடுத்துச் சொல்லும் நட்சத்திர சகுனங்கள்

ஆயகலைகள் அறுபத்தி நான்கில் பன்னிரெண்டாவதாய் "சகுன சாஸ்திரம்" குறிப்பிடப்படுகிறது. சகுன சாஸ்திரம் என்பது நம்முடைய சுற்றுச் சூழல், வானிலை, கோள்களின் அமைப்பு, பறவைகளின் ஒலி, விலங்குகளின் செயல்பாடுகள் போன்றவைகளை முன்னிறுத்தி சொல்லப்படுகிறது.

சகுனம் பார்க்கும் வழக்கம் பழந்தமிழகத்தில் நடைமுறையில் இருந்தற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. வெளியூர் பயணங்கள், சுப காரியங்களை துவக்குவது, தொழில் துவங்குவது, மருத்துவம் பார்ப்பது, போருக்கு கிளம்புவது என வாழ்வின் பல்வேறு செயல் பாடுகளில் சகுனம் பார்க்கும் வழக்கம் தொன்று தொட்டு இன்றளவும் தொடர்ந்து வருகிறது.

சித்த மருத்துவத்தைப் பொறுத்த வரை சகுன சாத்திரம் என்பது இருவகைப்படும் ஒன்று நோயாளியை மருத்துவரிடம் அழைத்து வரும் நேரம் மற்றும் அப்போதைய சூழ்நிலை விபரங்களை கொண்டு நோயை அல்லது நோயின் தன்மையை கணிப்பது. மற்றது நோயாளியின் இருப்பிடத்திற்கு மருத்துவரை அழைக்க வருபவரின் நடவடிக்கைகள், அவர் வந்த சூழ்நிலை போன்றவற்றை வைத்து நோயின் தன்மை மற்றும் நோயாளியின் நிலையை கணிப்பது.

சித்தர் பெருமக்களும் இத்தகைய தகவல்களை அருளியிருக்கின்றனர். அந்த வகையில் புலிப்பாணி சித்தர் அருளிய "புலிப்பாணி வைத்தியசாரம்" என்னும் நூலில் காணக் கிடைக்கும் தகவல்களையே நாம் பார்க்க இருக்கிறோம்.

இவை அஸ்வினி துவங்கி ரேவதி வரையிலான இருபத்தி ஏழு நட்சத்திரங்களும், அவற்றின் பாதங்களும் நடைபெறும் நேரத்தில் ஒருவர் நோய்வாய் பட்டிருந்தால் அந்த நோய் பற்றிய தெளிவும், தீர்வும் அருளப் பட்டிருக்கிறது.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அருளப் பட்ட இந்த தகவல்கள் நமக்கு ஆச்சர்யமாக தென்படலாம்.

தானென்ற அசுபதிநாள் முதற்காலப்பா
தயவான ஒன்பதுநாள் சுரமே தீரும்
தேனென்ற ரெண்டாங்கால் கொல்லுமப்பா
திரமான பத்தாநாள் மரணமாவான்
கோனென்ற மூன்றாங்கால் பதினைந்தாகும்
குணமாக நாலாங்கால் மரணஞ் செய்யும்
வானென்ற பரணிதனில் முதற்கால் மூன்று
வளமான ரெண்டாங்கா லேழாமென்னே.
என்னவே மூன்றாங்கால் பதினைந்தாகும்
எளிதில்லா நாலாங்கால் பதினைந்தாகும்

– புலிப்பாணி சித்தர்.

| | | |
|---|---|---|
| 1.அஸ்வினி, | 2.பரணி, | 3.கார்த்திகை, |
| 4.ரோகிணி, | 5.மிருகசீரிஷம் | 6.திருவாதிரை, |
| 7.புனர்பூசம், | 8.பூசம், | 9.ஆயில்யம், |
| 10.மகம், | 11.பூரம், | 12.உத்திரம், |
| 13.அஸ்தம், | 14.சித்திரை, | 15.சுவாதி, |
| 16.விசாகம், | 17.அனுஷம், | 18.கேட்டை, |
| 19.மூலம், | 20.பூராடம், | 21.உத்திராடம், |
| 22.திருவோணம், | 23.அவிட்டம், | 24.சதயம், |
| 25.பூரட்டாதி, | 26.உத்திரட்டாதி, | 27.ரேவதி |

ஆகிய இருபத்தியேழு நட்சத்திரத்திற்கும் நான்கு பாதங்களுக்கும் உரிய நோய்கள் குறித்த சகுன சாஸ்திரத்தை மிகத் தெளிவாக பாடல் வடிவில் எழுதியுள்ளார் புலிப்பாணி சித்தர்.

## அசுவினி நட்சத்திரம்:

அசுவினி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் ஒருவருக்கு நோய் உண்டாகி இருந்தால் ஒன்பது நாட்களில் அந்த சுரம் நீங்கி விடுமாம்.

அசுவினி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் ஒருவருக்கு நோய் உண்டானால் பத்தாவது நாளில் அவருக்கு மரணம் உண்டாகுமாம்.

அசுவினி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் ஒருவருக்கு நோய் உண்டானால் பதினைந்து நாட்களில் அந்த நோய் குணமாகுமாம்.

நான்காம் பாதத்தில் ஒருவருக்கு நோய் உண்டானால் அவருக்கு மரணம் சம்பவிக்குமாம்.

## பரணி நட்சத்திரம்:

பரணி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் ஒருவருக்கு நோய் உண்டானால் அது மூன்று நாட்களில் குணமாகுமாம்.

இரண்டாம் பாதத்தில் நோய் உண்டானால் அது ஏழு நாட்களில் குணமாகுமாம். பரணியின்

மூன்றாம் பாதம் நோய் கண்டால் பதினைந்து நாட்களில் குணமாகுமாம்.

நான்காம் பாதமானால் பதினைந்து நாளில் நலமாகுமாம்.

## கார்த்திகை நட்சத்திரம்:

கார்த்திகை நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் ஒருவருக்கு நோய் கண்டிருந்தால் ஒன்பது நாளில் குணமாகுமாம்.

கார்த்திகை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால் பத்து நாட்களில் சரியாகுமாம்.

கார்த்திகை நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால் பதினைந்து நாட்களில் குணமாகுமாம்.

கார்த்திகை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால் அந்த நோய் நாற்பத்தெட்டு நாட்களிலும் குணமாகுமாம்.

## ரோகிணி நட்சத்திரம்:

ரோகிணி நட்சத்திரத்தின் முதற்பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால், அந்த நோய் பத்து நாளில் குணமாகுமாம்.

ரோகிணி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால், அந்த நோய் பதினெட்டு நாட்களில் குணமாகும்.

ரோகிணி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால், அந்த நோய் முப்பத்திரண்டு நாட்களில் குணமாகும்.

ரோகிணி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால், அந்த நோய் எண்பத்திரண்டு நாட்களில் நலமாகுமாம்.



## மிருகசீரிடம் நட்சத்திரம்:

மிருகசீரிடம் நட்சத்திரத்தின் முதற்பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் முப்பது நாட்கள் கடந்த பின்னர் நலமாகுமாம்.

மிருகசீரிடம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் இருபத்தியெட்டு நாட்களில் நலமாகுமாம்.

மிருகசீரிடம் நட்சத்திரத்தின்மூன்றாவது பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் பதினைந்து நாட்களில் நலமாகுமாம்.

மிருகசீரிடம் நட்சத்திரத்தின்நான்காம் பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் முப்பத்தைந்து நாட்களில் குணமாகுமாம்.

## திருவாதிரை நட்சத்திரம்:

திருவாதிரை நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் ஒன்பது நாட்களில் குணமாகுமாம்.

திருவாதிரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாத்தில் உண்டானால் மரணமும் சம்பவிக்குமாம்.

திருவாதிரை நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் பத்து நாட்களில் நலமாகுமாம்.

திருவாதிரை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோயுற்றிருந்தால் அந்த நோய் இருபத்தி ஐந்து நாட்களிலும் நலமாகுமாம்.

## புனர்பூசம் நட்சத்திரம்:

புனர்பூசம் நட்சத்திரத்தின் முதற்பாதத்தில் நோய் கண்டிருந்தால் அந்த நோயானது ஏழு நாட்களில் குணமாகுமாம்.

புனர்பூசம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டிருந்தால் அந்த நோயானது பத்து நாட்களில் குணமாகுமாம்.

புனர்பூசம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டிருந்தால் அந்த நோயானது பதினெட்டு நாட்களில் குணமாகுமாம்.

புனர்பூசம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டிருந்தால் மரணம் சம்பவிக்குமாம்.

## பூசம் நட்சத்திரம்:

பூசம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் உண்டானால் ஏழு நாட்களில் குணமாகுமாம்.

பூசம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் உண்டானால் பன்னிரண்டு நாளில் குணமாகுமாம்.

பூசம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் உண்டானால் எண்பது நாட்களில் குணமாகுமாம்.

பூசம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் உண்டானால் இருபத்தேழு நாட்களிலும் குணமாகுமாம்.

## ஆயில்யம் நட்சத்திரம்:

ஆயில்யம் நட்சத்திரத்தின் முதற் பாத்தில் நோய் ஏற்பட்டால் ஒன்பது நாட்களில் நலம் கிடைக்குமாம்.

ஆயில்யம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் ஏற்பட்டால் இருபது நாட்களில் நலம் கிடைக்குமாம்.

ஆயில்யம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் ஏற்பட்டால் தொண்ணூறு நாட்களில் நலம் கிடைக்குமாம்.

ஆயில்யம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் ஏற்பட்டால் முப்பதொன்பது நாட்களில் குணமாகிவிடுமாம்.

## மகம் நட்சத்திரம்:

மகம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் மரணம் உண்டாகுமாம்.

இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் முப்பது நாட்களில் குணமாகுமாம்.

மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் அது குணமாக எண்பத்தைந்து நாட்கள் ஆகுமாம்.

நாலாம் பாதத்தில் நோய் கண்டால் அந்த நோய் ஐந்து நாட்களிலும் குணமாகுமாம்.

## பூரம் நட்சத்திரம்:

பூரம் நட்சத்திரத்தின் முதற்பாத்தில் உண்டானால் மரணம் சம்பவிக்குமாம்.

பூரம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமானால் இருபத்தைந்து நாட்களில் குணமாகுமாம்.

பூரம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதமானால் இருபத்தாறு நாட்களில் குணமாகுமாம்.

பூரம் நட்சத்திரத்தின் நான்காம் பாதமானால் எண்பத்தியோரு நாட்களில் நலமாகுமாம்.

## உத்திரம் நட்சத்திரம்:

உத்திரம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் உண்டானால் எட்டு நாட்களில் குணமாகுமாம்.

உத்திரம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமானால் முப்பது நாட்களில் குணமாகுமாம்.

உத்திரம் நட்சத்திரத்தின்மூன்றாம் பாதமானால் ஐம்பத்திரண்டு நாட்களில் குணமாகுமாம்.

உத்திரம் நட்சத்திரத்தின் நான்காம் பாதமானால் மரணம் சம்பவிக்குமாம்.

## அஸ்த நட்சத்திரம்:

அஸ்த நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் உண்டானால் எட்டு நாட்களில் குணமாகுமாம்.

அஸ்த நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமானால் பதினைந்து நாட்களில் குணமாகுமாம்.

அஸ்த நட்சத்திரத்தின் மூன்றாம் பாதமானால் இருபத்தெட்டு நாட்களிலும் குணமாகுமாம்.

அஸ்த நட்சத்திரத்தின் நான்காம் பாதமானால் எண்பத்திரண்டு நாட்களில் குணமாகுமாம்.

## சித்திரை நட்சத்திரம்:

சித்திரை நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் ஒன்பது நாட்களில் குணமாகுமாம்.

சித்திரை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமானால் பதினைந்து நாட்களில் குணமாகுமாம்.

சித்திரை நட்சத்திரத்தின் மூன்றாம் பாதமானால் பன்னிரண்டு நாட்களில் குணமாகுமாம்.

சித்திரை நட்சத்திரத்தின் நான்காம் பாதமானால் நாற்பத்தியொரு நாட்களில் நலமாகுமாம்.

## சுவாதி நட்சத்திரம்:

சுவாதி நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் பன்னிரண்டு நாட்களில் குணமாகுமாம்.

சுவாதி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமானால் மரணம் சம்பவிக்குமாம்.

சுவாதி நட்சத்திரத்தின்மூன்றாம் பாதமானால் எண்பத்தி எட்டு நாளில் குணமாகுமாம்.

சுவாதி நட்சத்திரத்தின் நான்காம் பாதமானால் பன்னிரண்டு நாட்களில் நலமாகுமாம்.

## விசாகம் நட்சத்திரம்:

விசாகம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் உண்டானால் எண்பது நாட்களில் நலமாகும்.

விசாகம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் உண்டானால் மூன்று நாட்களில் சுகமாகும்.

விசாகம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் உண்டானால் நாற்பது நாளில் குணமாகும்.


மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு செய்தும்
படிக்கலாம்





விசாகம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் உண்டானால் எண்பத்தொரு நாட்களில் அந்த நோய் தீருமாம்.

## அனுஷம் நட்சத்திரம்:

அனுஷம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் இறப்பு உண்டாகுமாம்.

அனுஷம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் இருபது நாட்களில் நலமாகுமாம்.

அனுஷம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் தொண்ணூறு நாட்களில் நலமாகுமாம்.

அனுஷம் நட்சத்திரத்தின் நாலாம் பாதத்தில் நோய் கண்டால் நாற்பது நாட்களில் நலமாகுமாம்.

## கேட்டை நட்சத்திரம்:

கேட்டை நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் மரணம் சம்பவிக்குமாம்.

கேட்டை நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் இருபது நாட்களில் குணமாகும்.

கேட்டை நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் முப்பத்தி ஒன்று நாட்களில்

குணமாகும்.

கேட்டை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டால் எண்பத் திரண்டு நாட்களில் குணமாகுமாம்.



## மூல நட்சத்திரம்:

மூல நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் மர ணம் உண்டாகுமாம்.

மூல நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் எண்பது நாட்களில் குணமாகுமாம்.

மூல நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் பத்து நாட்களிலும் குணமாகுமாம்.

மூல நட்சத்திரத்தின் நான்காவது பாதத்தில் நோய் கண்டால் பதினெட்டு நாட்களிலும் குணமாகுமாம்.

## பூராட நட்சத்திரம்:

பூராட நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் நோய் கண்டால் ஒன்பது நாளில் குணமாகுமாம்.

பூராட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் மரணம் சம்பவிக்குமாம்.

பூராட நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் பத்து நாட்களில் குண முண்டாகும்.

பூராட நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டால் பதினைந்து நாட்களில் நலமாகுமாம்.

## உத்திராட நட்சத்திரம்:

உத்திராட நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் ஏழு நாட்களில் நலமாகும்.

உத்திராட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத் தில் நோய் கண்டால் இருபது நாட்களில் நல மாகும்.

உத்திராட நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத் தில் நோய் கண்டால் ஐம்பது நாட்களிலும் குணமாகுமாம்.

உத்திராட நட்சத்திரத்தின் நாலாவது பாதத் தில் நோய் கண்டால் முப்பத்தொன்பது நாளில் நலமாகுமாம்.

## திருவோண நட்சத்திரம்:

திருவோண நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் நோய் கண்டால் பதினோரு நாட்களில் குண மாகும்.

திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் பத்து நாட்களில் நல மாகுமாம்.

திருவோண நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் எட்டு நாட்களில் நல மாகுமாம்.

திருவோண நட்சத்திரத்தின் நான்காம் பாதத் தில் நோய் உண்டானால் மரணம் நிகழுமாம்.

## அவிட்டம் நட்சத்திரம்:

அவிட்டம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் ஒன்பது நாட்களில் குணமாகும்.

அவிட்டம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத் தில் நோய் கண்டால் பதினைந்து நாட்களில் குணமாகும்.

அவிட்டம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் முப்பத்தியிரண்டு நாட்களில் குணமாகுமாம்.

அவிட்டம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத் தில் நோய் கண்டால் முப்பத்தொன்பது நாட்களில் குணமாகுமாம்.

## சதயம் நட்சத்திரம்:

சதயம் நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் ஏழு நாட்களில் குணமாகும்.

சதயம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் பத்து நாட்களில் குணமாகும்.

சதயம் நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் நான்கு நாட்களில் குணமாகும்.

சதயம் நட்சத்திரத்தின் நாலாம் பாதத்தில் நோய் கண்டால் ஐந்து நாட்களிலும் நலமாகுமாம்.

## பூரட்டாதி நட்சத்திரம்:

பூரட்டாதி நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் மரணம் சம்பவிக்குமாம்.

பூரட்டாதி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத் தில் நோய் கண்டால் பதினாறு நாட்களில் குண மாகும்.

பூரட்டாதி நட்சத்திரத்தின் முண்றாம் பாதத்தில் நோய் கண்டால் எண்பத்தொரு நாட்களிலும் நலமாகுமாம்.

பூரட்டாதி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டால் நாற்பத்தியொரு நாட்களிலும் குணமாகுமாம்.

## உத்திரட்டாதி நட்சத்திரம்:

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் ஏழு நாட்களில் குணமாகுமாம்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் பதினெட்டு நாட்களில் குணமாகும்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் ஏழு நாட்களில் குண மாகும்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டால் இருபத்தெட்டு நாட் களிலும் குணமாகுமாம்.

## ரேவதி நட்சத்திரம்:

ரேவதி நட்சத்திரத்தின் முதற் பாதத்தில் நோய் கண்டால் மரணம் சம்பவிக்குமாம்.

ரேவதி நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் நோய் கண்டால் பதினோறு நாட்களில் குண மாகும்.

ரேவதி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் நோய் கண்டால் பதினெட்டு நாட்களில் நலமாகுமாம்.

ரேவதி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் நோய் கண்டால் இருபத்தி ஆறு நாட்களில் நலமாகுமாம்.



கீதா–ராஜன்





# கோவிலை மாற்றினாலும் பீடத்தை மாற்ற முடியாமல் தவிக்கும் நிர்வாகம்

ஔரங்காபாத்திலுள்ள ஹஜ்ரத் ஜலாலுதின் தர்காவில் உள்ள சிவலிங்க பீடம்தான் இது.

முகலாயர் காலத்தில் பல்வேறு இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டு, முகலாயர்கள் தங்கள் மத ஆலயங்களாக மாற்றியுள்ளனர், அப்படி நிறுவியதில் இந்த தர்காவும் ஒன்று.

இங்கு அனைத்து இந்து மத சின்னங் களையும் அழித்தவர்கள், இந்த பீடத்தை மட்டும் அகற்ற முடியாமல் திணறுகின்றனர். இந்த பீடத்தை அகற்ற ஆயிரக்கணக்கான முறை முயற்சித்தும் அவர்களால் முடியவில்லை.

ஒன்று பீடத்தை அகற்ற வரும் JCB இயந்திரங்கள் பழுதாகி சேதமடையும், இல்லையென்றால் பீடத்தை அகற்ற முயற்சி மேற்கொள்ளும் தரகருக்கு ஏதாவது ஒரு விதத்தில் மரணம் சம்பவிப்பது வழக்கமாகி வருகிறது. இப்படி இந்த பீடத்தை அகற்ற எவ்வளவு முயன்றும் முடியாமல் தோற்றுப் போய் சோர்ந்து போய்விட்டனர். இந்த தர்கா நிர்வாகத்தினர்.

இதனால் அந்த பீடத்தை அகற்றும் எண்ணத்தை கைவிட்டுவிட்டு, அதன் அருகில் செல்வதுகூட இல்லை.

# பிரபஞ்ச விதிமுறையினால் விதிக்கப்பட்டுள்ள மனிதனின் பரிணாமம்

அன்பிற்குரிய மற்றும் மதிப்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "வெவ்வேறு காலங்களிலும் இடங்களிலும் மனிதன், தன்னுடைய சிந்தனை முறைகளினால் வாழ்க்கை மற்றும் ஆன்மா பற்றிய பலவிதமான கருத்துக்களை உருவாக்கியுள்ளான். உதாரணமாக சில பழங்குடி இனத்தவர்கள் தலைவலி வந்தால் தங்களுடைய ஆன்மா தொலைந்துவிட்டது என்று எண்ணி குணமடைவதற்காக மருத்துவமனையை நாடுவார்கள். அவன் தொலைந்த ஆத்மாவைத் தேடி காட்டிற்குச் சென்று அதனை ஒரு பெட்டியில் திரும்பக் கொண்டு வருவான். பிறகு அவன் ஆன்மாவை நோயாளியின் தலையில் திரும்பவும் வைப்பான். அத்துடன் தலைவலி போய்விடுவதாக நம்பப்பட்டது. வேறொரு இனப்பண்பாட்டில், யாராவது நோயுற்றிருந்தால், மீன் தூண்டில்களை அவரது தலையில் மாட்டிவைப்பது வழக்கம். அதனால் அவர் தும்ம நேர்ந்தால் அவரது ஆன்மா தப்ப முடியாமல், தூண்டிலில் மாட்டிக்கொள்ளுமாம்."

"குறைபாடுள்ள சிந்தனை முறையினால் சிலர் ஆன்மாவைப் பற்றிய தவறான முடிவுகளுக்கு வந்துள்ளதுபோலவே, மற்றவர்கள் விவேகத்தினால் மிக ஆழ்ந்த அறிவை எட்டியுள்ளனர். ஆன்மா என்பது 'குப்' என்று வெளிவரும் ஒரு மூச்சுக்காற்று அல்ல என்பதை நாம் அறிவோம். ஏனெனில் முக்கிய செயல்பாடுகளுடன் ஜீவன் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் சுவாசிக்காமலேயே நீண்டகாலம் வாழ்ந்தவர்கள், ஆன்மாவானது சுவாசத்தால் கட்டுப்படுத்தப்பட முடியாதது என்பதை உணர்த்தி உள்ளனர். ஆன்மா, சுவாசம் அல்லது எந்த இதர தேக நிலையையும் கடந்த ஒன்றாகும்."

"ஒருவர் தன்னை ஓர் ஆன்மாவாக நம்பினாலும் சரி, அல்லது நம்பாவிட்டாலும் சரி, அவர் அறிந்தோ அல்லது அறியாமலோ தன் ஆழ்ந்த இயல்பை விருத்தி செய்ய பிரபஞ்ச விதிமுறையினால் கட்டுப் படுத்தப்படுகிறார். வாழ்க்கையில் ஒரு மனிதனுடைய உத்தியோகம் எதுவாக இருந்தாலும் அவர் எதையாவது திட்டமிட்டுக்கொண்டிருக்கும்பொழுதோ அல்லது தனது அறிவாற்றலை ஆக்கபூர்வமாக வேறு விதத்தில் பயன்படுத்திக்கொண்டிருக்கும்பொழுதோ, அவனது உணர்வுநிலை விருத்தியாகிக்கொண்டிருக்கிறது. மனிதன், அவன் புரியும் ஒவ்வொரு ஆக்கபூர்வமான செயலின் மூலமாகவும் பரிணாம வளர்ச்சி அடைகிறான். "



குருப்ரியா

மேலும் அவர் கூறுகிறார்; " பெரும்பாலானவர்களிடம் உள்ள பிரச்சனை என்னவென்றால், அவர்கள் ஒரு வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது, வேறு எதையாவது சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதைச் செய்து கொண்டிருக்கிறார்களோ, அதன் மீது எவ்வாறு ஒருமுகப்படுவது என அவர்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் ஒரு சமயத்தில் ஒரு பொருளைப் பற்றி உங்கள் மனதில் முழு சக்தியுடனும் சிந்திப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய முழு கவனமும் அங்கே இருக்க வேண்டும். மனதை இங்கும் அங்கும் அலையவிடாதீர்கள். உற்சாகம் இல்லாமல் வேலைகளைச் செய்வது தோல்விக்கும் துயரத்திற்கும் வழி வகுக்கிறது."

89
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

"மனிதன் ஒரு மனோ ரீதியான தானியங்கி இயந்திரமாக, உள்ளுணர்வு மூலமாக மட்டுமே செயல்படும் விலங்கினைப் போல இருக்கக் கூடாது. சிந்திக்காமலிருப்பது. உங்களுக்குள் உறையும் பரம்பொருளுக்கு எதிரான பெரும் பாவமாகும்; நாம் என்ன செய்கிறோமோ அதைப்பற்றி உணர்ந்திருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் செயலாற்றுவதற்குமுன், சிந்திக்க வேண்டும். நாம் நம் மனங்களை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால் நாம் விருத்தி அடைந்து இறைவனுடனான நமது ஒன்றிய தன்மையை உணர்ந்துகொள்ளலாம். நாம் செய்யும் ஒவ்வொன்றும், முன்கூட்டியே சிந்தித்த எண்ணத்தின் விளைவாக இருக்க வேண்டும்."

மேலும் அவர் கூறுகிறார்; "உயர்ந்த இலக்குகளை லட்சியமாகக் கொள்ளுங்கள். முக்கியமற்ற பொருட்களை அடைவதற்காக எண்ண சக்தியை உபயோகிப்பது வீண். மனத்தோட்டத்தில் வளர்ந்துள்ள களைகளை நீக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மனத்தோட்டத்தை அங்கே இறைவன் வருவதற்கேற்க மிகவும் அழகுபடுத்துங்கள். அறிவாகிய நிலத்தில் பூத்து குலுங்கும் அத்தகைய மனத்தோட்டத்தை நீங்கள் பெற்றிருக்க



விரும்பினால், உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் எளிமையாக்க வேண்டும். அனைத் தையும் கவனக்குறைவாக இல்லாமல், உணர்வு பூர்வமாகச் செய்வதால் உங்களு டைய செயற்பாடுகளை நீங்கள் ஆராய முடியும். பின்னர் முக்கியமானதைத் தேர்ந்தெடுத்து, தேவையில்லாதவற்றை நீக்கி விடுங்கள். உங்களுடைய கடமைகளை முடித்த உடனேயே, அவற்றிலிருந்து உங்கள் மனதை உள்வாங்கி அதை மற்ற ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுத்துங்கள்."

மனத்தோட்டத்தில் வளர்ந்துள்ள களைகளை நீக்கி, அவ்விடத்தை இறைவன் வருவதற்காக அழகுபடுத்தக் கூறுகிறார் குருதேவர். அதற்கு நறுமணமுடைய பூக்க ளால். அலங்கரிக்கத் தேவையில்லை. மாறாக பல பிறவிகளில் நாம் செய்துள்ள தீயகர்மங்களால் ஏற்பட்டுள்ள, மனதில் படிந்திருக்கும் கர்மாவாகின்ற அழுக்கினை, நல்ல கர்மங்கள் செய்வதன் மூலம் களைந்து மனதை பரிசுத்தமாக்கி தீய எண்ணங்களால் தேவையின்றி முளைத்துள்ள சின்னச் சின்னக் களைகளை வைராக்கியம் என்ற கோடாலியால் வெட்டி, மனமெனும் மண்ணா கின்ற நிலத்தை விசாலமாக்கி, இறைவன் வந்து அமர்வதற்கான பக்தி, நிபந்தனையற்ற அன்பு போன்ற நவரத்தினக்கற்களால் செய்யப் பட்ட சிம்மாசனத்தைத் தயார் செய்து வைக்க வேண்டும். இவ்வாறு தினமும் ஒருவர் செய்யத்தொடங்கினால் நிச்சயமாக இறைவன் அங்கே வருவான் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

இவ்வுலகம் மூடநம்பிக்கையின் உறவிடமாக உள்ளது. ஒவ்வொரு மனிதனின் மனதிலும் மூடநம்பிக்கை உறைந்திருக்கின்றது. அதை முதலில் சரிசெய்ய வேண்டும். உதாரணமாக "நாம் கோவிலுக்குப் போகிறோம்., பின்னர் திரும்பிவரும் வழியில் நமக்குத் தெரிந்தவர்களோ அல்லது மிகவும் வேண்டியவர்களோ இருந்தால் அவர்களின் வீட்டுக்குப் போகக்கூடாது. போனால் நாம் கோவிலுக்குச் சென்று பெறப்பட்டுள்ள அருள் முழுவதும் நாம் செல்கின்ற வீட்டிலுள்ளவர்கட்குச் சென்றுவிடும்" என்பது ஒரு மூடநம்பிக்கை. மற்றொன்று என்னவென்றால் " கோவிலுக்குச் சென்று திரும்பி வந்து கால்களைக் கழுவக்கூடாது"

இது இரண்டாவது மூடநம்பிக்கை இரவு நேரங்களில் யாராவது பணம், தண்ணீர், புளி, உப்பு போன்றவற்றைக் கேட்டால் கொடுக்கக்கூடாது என்கிறார்கள். இன்னும் கடைகளில் இரவில் அதாவது 6.00 மணிக்மேல் ஊசி கொடுக்கமாட்டார்கள். இது விலைகொடுத்து வாங்குவது. இது போன்ற எண்ணற்ற மூட நம்பிக்கைகளை மனிதர்கள் மனதில் சேர்த்து வைத்துள்ளனர். இவற்றை அப்படியே வைத்திருந்தால் அதுவும் அழுக்குதான். அது கர்ம வாசனையாக மாறிவிடும். இவற்றையெல்லாம் மனிதன் தன் மனதில் வைத்திருப்பது நன்றன்று. இவைகள் மனிதனின் பரிணாம வளர்ச்சியை கெடுக்கின்றன. இது போன்றவைகள் இருக்கக்கூடாது. இறைவனின் பிரபஞ் ச விதிகளை மதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். இறைவனின் விதிகளை மதிக்கவும் பிறகுக்குப் பயன்படும் பொருட்கள் நம் கைவசமிருந்தால் கொடுக்கவும் வேண்டும். அனைவரும் இறைவனின் குழந்தைகள். அனைத்து குழந்தைகளுள்ளும் இறைவன் உறைந்திருக்கிறான். பிறருக்கு உதவி செய்து வாழ்ந்தால் இறைவன் மகிழ்வான். இது போன்ற சின்னச்சின்ன விஷயங்கள் மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு உதவுகின்றன. பரிணாம வளர்ச்சி அடைய வில்லையென்றால் இறைவனை அடைய முடியாது.

மேலே கூறியுள்ளவாறு கோவிலுக்குச் சென்று திரும்பும் போது வழியில் எங்கேயும் இறங்கக்கூடாது மற்றுமுள்ள நிபந்தனைகளை என்னிடம் ஒரு நபர் கூறினார். அதற்கு நான் . " இறைவனின் குழந்தைகளாகின்ற நாம் இதுபோல் இறைவனின் விதிகளுக்கு மாறாகச் செய்தால் இறைவன் மகிழமாட்டான். நரம் இதுபோன்ற சிறுசிறு விஷயங்களைச் செய்து அவனை மகிழ்விப்பதே சாலச்சிறந்தது. அதுதான் நமக்கு நல்லது. இவ்வாறு செய்யும்போது பெரிய விஷயங்களைச் செய்ய நம்மை ஊக்குவித்து உடனிருந்து இறைவன் அருள்வான். அவன் நம் செயல்களைக் கண்டு மகிழ்வான். இவ்வாறு அவனே நம்மை தூண்டி, நன்மைகள் பல பிறருக்காகச் செய்ய வைப்பான். இறைவனை அடைவதென்பது சாதாரணமன்று. மனம் பரிணாம வளர்ச்சி அடைந்தால் மட்டும்தான், இறைவனை அடைய முடியும். நீங்கள் கூறியதுபோல் நாம் வாழ்ந்தால் அது சுயநலமாகும். சுயநலம் இருக்கக்கூடாது என்பது இறைவனின் விதி முறைகளில் ஒன்று" என்றேன்.

இவ்வாறான நம்முடைய நற்செயல்களைக் கண்டு நம் மனதை முன்னேற்றமடையச் செய்வான். அதுமட்டுமின்றி இறைவன் மனித மனதில் இடம் பிடிப்பதற்கான வழிகள்தான் மேலே கூறியுள்ளவை. இவ்வாறு செய்யும்பொழுது நம் மனம் ஒளிர ஆரம்பிக்கும். எல்லாவிதத்திலும், அதாவது பிறரைவைத்து நம் மனதை புண்படுத்தும் விதத்தில் பேசவைப்பான். முதலில் அவைகள் நம் மனதைப் புண்படச் செய்கின்றன. நாட்கள் செல்லச் செல்ல அவைகள் நம் மனதைப் புண்படச் செய்யாது. மனம் மாறத் தொடங்கும். இவற்றையெல்லாம் செய்ய வைப்பது இறைவன்தான். அவன் உடனிருப்பான். அவன் இருக்கும் இடம் எந்தக் குறையுமில்லாமல் மகிழ்ச்சியான வாழ்வையும் அமைதியையும் தருகின்ற இடமாக இருக்கும். இதை இதற்கு முன்னருள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள் ளேன். நாம் நமது ஆன்மாவை இறைவனிடம் சேர்ப்பது என்பதுதான் நமக்கு இறைவன் தந்துள்ள பணி. அதை பொறுப்பாகவும் சிறப் பாகவும் திறமையாகவும் செய்து முடிப்பதே நம் கடமையாகும். அதற்கான மார்க்கம்தான் தியானம். தியானத்தால் மட்டும்தான். நம் மனதை பரிணாம வளர்ச்சி அடையச் செய்யமுடியும் என்பது தான் உண்மை.

பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்:

ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்தியநாதீ
உபாவபி
விகாராம்ச்ச குணாம்ச்சைவ வித்தி
ப்ரக்ருதி ஸம்பவான்.
க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞஸ்வரூபங்களைத்தான்

சில ஸ்லோகங்களில் ப்ரக்ருதியும் புருஷனும் (மாயையும் இறைவனும்) என்று கூறுகின்றனர். வேதாந்த சாஸ்திர ஸித்தாந்தத்தின்படி ஞான அஞ்ஞானங்க ளின் சொரூபத்தை விளக்கி ஸாங்க்ய சித்தாந்தப்படி விளக்கப்போகிறது. தத்து வங்களை மொத்தமாகச் சேர்த்து அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். அவற்றை ப்ரக்ருதி என்றும் புருஷன் என்றும் சொல் வர். அவை இரண்டும் எப்பொழுது உண்டா னது என்று கூற முடியாது. அவை இரண்டும் அனாதியாகின்றன. சைதன்யம் புருஷனும் பொருள் ப்ரக்ருதியுமாகிறது. எண்ணங்கள், பரிணாம வளர்ச்சியின்மை உற்பத்திலயங்கள் போன்றவையெல்லாம் பொருளை ஆதாரமாக்கித்தானே நிற்கின்றன. எனவே அவையெல்லாம் ப்ரக்குதியின் சொரூபங்களாகின்றன. ஸத்வாதி குணங்களும் ப்ரக்ருதி சொரூபங்களாகின்றன. ப்ரக்ருதியின் எல்லா செயல்களுக்கும் கேவலம் ஸாக்ஷி மட்டுமாக இருப்பது புருஷன் அல்லது சைதன்யம். இதே ப்ரக்ருதி புருஷர்களைத்தான் க்ஷேத்ரமும் க்ஷேத்திரஜ்ஞனுமாக கூறுவது. (பகவத் கீதை அத் 13 ஸ்லோகம் 19)

மாயையின் மூலமாகத்தான் மன அழுக்குகள் ஏற்படுகிறது. அவற்றையெல்லாம் நாம் அவசியம் அகற்ற வேண்டும். அவைகள் மனிதனின் பரிணாம வளர்ச்சியைக் கெடுக்கின்றன. பெரும்பாலானோர்களும் மூடநம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். நாம் பிறருக்கு செய்யும் நன்மையால் இறைவன் மகிழ்வான். அதுதான் முக்கியம். சின்னச்சின்ன விஷயங்கள் அதாவது நன்மைகள் முதலில் செய்து, பின்னர் பெரிய நன்மைகள் செய்து மக்களையும் இறைவனையும் மகிழவைக்கலாம். நற்செயல்கள் செய்யச் செய்ய நம் மனம் பரிணாமவளர்ச்சியை அடைந்து பின்னர் இறைவனை அடைவதற்கு அவை நமக்கு உதவுகின்றன. குணங்களின் ஆதிக்கம்தான் மூடநம்பிக்கையை உற்பத்தி செய்கிறது. எனவே அனைத்தையும் இறைவனிடத்தில் சமர்ப்பித்து குருதேவரின் போதனைகளைச் கடைபிடித்து வாழ்நாளை கடத்தினால் நமக்கு எந்த ஆபத்தும் எப்பொழுதும் வராது.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# வாசுதேவ ஸ்ரீ கிருஷ்ணர் அறியா அற்புத தகவல்கள்



எஸ்.ரகுராமன்

பகவான் ஸ்ரீ மன் நாராயணன் எடுத்த அவதாரங்கள் 24. அவற்றில் தசாவதாரம் மிகவும் முக்கியமானது. அதிலும் பரிபூரண அவதாரமாக விளங்குவது ஸ்ரீ ராம ஸ்ரீ கிருஷ்ண என்னும் இரண்டு அவதாரங்கள் மட்டும்தான்.

யாதவ குலத்தில் மொத்தம் ஏழு பிரிவுகள் உள்ளன. அதில் ஹைஹேயர்கள் யாதவ குலத்தில் உயர் பிரிவை சேர்ந்தவர்களாகவும் மற்ற யாதவ குல பிரிவுகளான சேதர்கள், விதர்ப்பர்கள், அந்தகர்கள், குகுரர்கள், போஜர்கள் மற்றும் விருஷ்ணிகள். ஸ்ரீ கிருஷ்ணர் இதில் விருஷ்ணி பிரிவை சேர்ந்தவர். இவரால் வ்ருஷ்ணி வம்சமே புகழ் பெற்றது.

ஸ்ராவண பஹுள அஷ்டமியன்று ரோஹிணி நக்ஷத்திரத்தில் சந்திர வம்சத்தில் ஸ்ரீ வசு தேவருக்கும் தேவகிக்கும் மகா விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாக பிறந்தவர். பின்பு கோகுலத்தில் யசோதா மற்றும் நந்த கோபரால் வளர்க்கப்பட்டவர்.

ஸ்ரீ கிருஷ்ணரின் குழந்தை ரூபமும், பால்ய லீலைகளை எத்துணை முறை கேட்டாலும், படித்தாலும், பார்த்தாலும் சலிக்காத ஒன்று. இது ஸ்ரீ க்ருஷ்ணருக்கே உரித்தான அடையாளம். ஸ்ரீ ராம கிருஷ்ண அவதாரங்கள் மட்டுமே என்றும் ஒன்றுக்கொன்று பிரிக்க இயலாததாக விளங்குகின்றது. பல கனக்கற்ற அசுரர்களை அழித்து பூ பாரத்தை குறைத்து உலகில் சனாதன தர்மத்திற்கு வித்திட்ட இறைவனில் பிரதானமாக கருதப்படுபவர் ஸ்ரீ கிருஷ்ணா பரமாத்மா.

ஸ்ரீ கிருஷ்ணர் அகில உலங்களுக்கும் இறைவனாக (Universal God) விளங்குகிறார். இது இவருக்கு மட்டும் உண்டான தனிச்சிறப்பு.

கி.மு. 3228, ஜூலை 19ம் நாள், ஸ்ரவன மாதம் தேய்பிறையின் அஷ்டமி திதியின் நள்ளிரவில், மதுராவின் சிறைச்சாலையில் கிருஷ்ணர்



குழந்தையாக அவதரித்தார். அன்றிரவே கோகுலம் சென்றடைந்தார்.

3 வருடம், 4 மாதங்கள் வரை கோகுலத்தில் வசித்த பின், விருந்தாவனம் சென்றார். மேலும் 3 வருடம் 4 மாதங்களை விருந்தாவனத்தில் கழித்தபின் 6 வருடம் 8 மாத வயதில், நந்த கிராமத்திற்கு இடம் பெயர்ந்தார்.

10 வருடம் 7 மாத வயதில் சைத்ர மாத தேய்பிறையின் 11வது நாளில் கம்சனின் அழைப்பின் பேரில் மதுரா சென்றார். (கிருஷ்ணரின் திவ்யமான உடல் பத்து வயதைத் தாண்டி மாறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.) அன்றிலிருந்து பதினான்காவது நாளில் கம்சனைக் கொன்றார்.

18 வருடங்கள் 4 மாதங்கள் மதுராவில் வசித்த கிருஷ்ணர், 28 வயதில் துவாரகை கோட்டையை நிறுவி அங்கு வசிக்கத் தொங்கினார்.

கி.மு 3138, 90 வயதில் பகவத்கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தார்.

96 வருடங்கள் 8 மாதங்கள் துவாரகையில் வசித்த பின், கி.மு 3102, பிப்ரவரி 18ம் நாள், 125 வயதில், பல்குன மாதத்தின் அமாவாசை அன்று இவ்வுலகிலிருந்து புறப்பட்டு, மீண்டும் ஆன்மீக உலகத்திற்குச் சென்றார்.

(ஆதாரம்: ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர் அருளிய பாகவத உரை)

ஸ்ரீ கிருஷ்ணரின் குரு ஸ்ரீ சாந்தீபனி மகரிஷி. நந்தகோபரின் குல குரு கர்காசார்யர்.

நாம ஜெபம், பஜனை சம்பிரதாயங்களில் பிரதானமாக ஸ்ரீ ராம மற்றும் கிருஷ்ண கீர்த்தனங்களே இடம்பெறும். நமது சனாதன தர்மத்திற்கு வித்திட்ட ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதரின் குல தெய்வம் ஸ்ரீ கிருஷ்ணர்.

ஆயிரம் விஷ்ணு நாமங்கள் ஒரு ராம நாமத்துக்கு சமம் என்றும், மூன்று ராம நாமம் ஒரு கிருஷ்ண நாமத்துக்கு சமம் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டு உள்ளது.

ஐந்தாம் வேதமான ஸ்ரீ பகவத் கீதை என்னும் ஒப்பற்ற பொக்கிஷத்தை குருவாகி அர்ஜுனனை மூலமாக வைத்து நமக்கு அளித்த மஹா குரு. இந்த ஜகத்திற்கே ஆதி புருஷர் மற்றும் ஆதி குரு ஸ்ரீ கிருஷ்ணர் ஒருவர் மட்டுமே "ஸ்ரீ க்ருஷ்ணம் வந்தே ஜகத் குரும்" என்று நாம் வணங்கும் அனைத்து குரு மஹநீயர்களின் க்ருபா கடா க்ஷம் முடிவில் ஸ்ரீ க்ருஷ்ணரையே சென்று அடைகிறது. இறைவனை குருவாக பார்ப்பது ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு பிறகு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை மட்டுமே. தாமே இந்த பிரபஞ்சத்தில் அனைத்திலும் முழுமையாக வியாபித்து இருப்பதாகவும், அனைத்து தேவதைகளின் வடிவாகவும், அனைத்து வழிபாடுகளும், பூஜை முறைகளும் முடிவில் தம்மை வந்து அடைவதாகவும் பகவத் கீதையின் 10 ஆவது அத்யாயமான விபூதி யோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விஸ்வரூபமே இதற்கு சாட்சியாக விளங்குகிறது.

ஸ்ரீமத் பாகவதம் (10ஆவது அத்யாயமான தசம ஸ்கந்தம்) மஹாபாரதம், விஷ்ணு புராணம், ஹரி வம்சம், ஸ்ரீ மகா பக்த விஜயம் முழுமையும் ஸ்ரீ கிருஷ்ண ப்ரபாவம்தான்.

பரமாத்மா என்னும் சப்தம் ஸ்ரீ கிருஷ்ணரயே குறிக்கும். முக்தி ஞானம் வழங்கும் ஒரே கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே.

ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சங்களாக கருதப்படுபவை: பசு, அந்தணர், தேவர், மூத்தோர், குரு மற்றும் ஜீவ ராசிகள்.

அணைத்து மந்திரங்களிலும் பிரதானமான ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஸ்ரீ பீஷ்ம பிதா மஹரால் குருக்ஷேத்ரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் முன்னால் கூறப்பட்ட பெருமை பெற்றது.

நமது ஹிந்து தர்மத்தின் ஆணிவேராக வேதத்திற்கு அடுத்தபடியாக விளங்குவது ஸ்ரீ மத் பகவத் கீதையும் , ஸ்ரீ மத் பாகவத மஹா புராணமும் , ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமமும் மட்டுமே. இம்மூன்றும் ஸ்ரீ கிருஷ்ணரால் மட்டுமே நமக்கு கிடைத்த பொக்கிஷம்.

கோ பூஜை, காயத்ரி ஜபம், அந்தணர்களை வணங்குதல், பகவத் கீதை பாராயணம், கங்கா ஸ்னானம், குரு பூஜை, மாதா பிதா வந்தனம், ஸஹஸ்ரநாம பாராயணம், நாம ஜெபம், தானம் வழங்குதல், சத்யம் வழுவாமை, பதி ஸேவை, ஸ்த்ரீ சம்ரக்ஷணம் இவை க்ருஷ்ண பக்தர்களுக்கு இருக்க வேண்டிய உன்னத லக்ஷணங்கள்.

கிருஷ்ணர் வணங்கும் ஆறு பேர்
நித்யான்ன தாதா
தருணாக்னிஹோத்ரி
வேதாந்தவித் சந்திர சஹஸ்ர தர்சீ
மாஸோபாவாசீச
பதிவ்ரதா ச
ஷட் வந்தனீ யா மம ஜீவ லோகே

நித்ய அன்னதானம், அக்னிஹோத்ரம், வேதம் ஓதுவோர், சதாபிஷேகம் செய்து கொண்டவர், ஏகாதசி உபவாசம் இருப்பவர் மற்றும் பதிவ்ரதா பெண்கள்.

ஸப்த புண்ணிய ஷேத்ரங்களில் இரு புண்ணிய க்ஷேத்ரங்களான மதுரா மற்றும் துவாரகா ஸ்ரீ க்ருஷ்ணர் வாசம் புரிந்த இடங்களாகும். (மற்றவை காசி, அவந்திகா, காஞ்சி, அயோத்யா,ஹரித்வார்)

நமது பாரத புண்ணிய பூமியில் குரு மஹநீயர்களில் பெரும்பாலும் ஸ்ரீ ராம மற்றும் ஸ்ரீ க்ருஷ்ணரை பிரதான மூர்த்தியாக வணங்கி நமது பூமியில் சனாதன தர்மத்தை வித்திட்ட பிரதான ஸ்ரீ கிருஷ்ண பாகவதோத்தமர்கள்: நாரதர் , உத்தவர், திரௌபதி, அர்ஜுனன், ஸ்ரீமன் மத்வாசார்யர், ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு, நாமதேவர், துக்காராம், ஞானதேவர், நிவ்ருத்தி மஹாதேவ், பக்த மீரா, ஜனாபாய், சூர்தாசர், ஸ்ரீ நாராயண பட்டதாரி, பில்வமங்கள ஸ்வாமிகள், குரூர் அம்மையார், பூந்தானம் மற்றும் பல பல பாகவதோத்தமர்கள்.

ஸ்ரீ கிருஷ்ணரின் அஷ்ட மஹிஷிகள்

ருக்மிணி, சத்யபாமா, ஜாம்பவதி, நீலா, பத்ரா, மித்ரவிந்தா, காளிந்தீ, லக்ஷணா. இதில் ருக்மிணி, சத்யபாமா இருவரும் சாக்ஷத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியே. மற்ற அறுவர் ஷன்மஹிஷிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணரின் சக்திகள் பின்வரும் பிரதான 18 புதல்வர்களாக உருவெடுத்தது:

ப் ர த் யு ம் ன ன் , அநிருத்தன், தீப்திமான், பானு, சாம்பன், மது, பிருஹத்பானு, சித்ரபானு, விருகன், அருணன், புஷ்கரன், வேதபாஹு, ச்ருததேவன், ஸுநந்தனன், சித்ரபாஹு, விரூபன், எனும் வரூதன், கவி, ந்யக் ரோதன்.



க்ருஷ்ணாய வாஸுதே வாய தே வகீநந்த நாய ச!
நந்த கோப குமாராய கோவிந்தாய நமோ நம:!!

வசுதேவர் தேவகியின் மகனும், நந்தகோபரின் செல்வகுமாரனுமாகிய கோவிந்தனுக்கு வந்தனங்கள்.

நம: பங்கஜநாபாய நம: பங்கஜமாலிநே !
நம: பங்கஜநேத்ராய நமஸ்தே பங்கஜாங்க்ரயே !!

தாமரையை நாபியிலுடையவரும், தாமரை மாலையணிந்தவரும், தாமரைக் கண்ணரும், தாமரை போன்ற சரணங்களை உடையவருமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பிராணாமங்கள்.

கஸ்தூரீதிலகம் லலாடப லகே வக்ஷ:
ஸ்த லே கௌஸ்துப ம்
நாஸாக் ரே வரமௌக்திகம் கரதலே வேணும்
கரே கங்கணம்!
ஸர்வாங்கே ஹரிசந்த நம் ச கலயந் கண்டே ச
முக்தாவளிம்
கோபஸ்திரீபரிவேஷ்டிதோ விஜயதே
கோபாலசூடாமணி:!!

நெற்றியில் கஸ்தூரி திலகமும், மார்பில் கௌஸ்துபமணியும், மூக்கின் நுனியில் முத்து புல்லாக்கும், கையில் வேய்ங்குழலும், கரங்களில் வளையல்களும், மார்பு நிறைய சந்தனப்பூச்சும் கொண்டு முத்து மாலை அணிந்தவனாக, கோபியர்கள் புடை சூழ நிற்கும் இடைச்சிறுவர்களின் தலைவனான ஸ்ரீ கிருஷ்ணன் மகிமையுடன் விளுங்குகிறார்.

ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமியன்று கீழ்கண்ட ஸ்லோகத்தை சொல்லி அர்க்யம் விடுவது பரம பவித்ரம்.

ஜாத: கம்ஸவதா ர்த் தாய பூ பா
ரோத்தாரணாய ச!
கௌரவாணாம் விநாஸாய தை
த்யானாம் நித நாய ச!
பாண்டவானாம் ஹிதார்த் தாய த ர்ம
ஸம்ஸ்தா பனாய ச!
க் ருஹாணார்க் யம் மயா த த்தம்
தேவக்யா ஸஹிதோ ஹரே!.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்
செந்தில்நாதன்

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# நெற்றிக் கண்ணைக் கொண்டு சிந்தி

மனித மனம் கெடாமல் இருக்க,
மனிதன் ஆண்டவனை
மனதிலேயே கொள்ள வேண்டும்.

❖❖❖

ஆடு, மாடு இன்னும் பல பொருள்
களையும் விலைக்கு வாங்கலாம்.
ஆனால் அன்பு ஒன்றையே கொண்டு,
அகில உலகையும் உனதாக்கிக்
கொள்ளலாம். ஆனால் அந்த அன்பு
சுத்தமாயிருத்தல் வேண்டும்.

❖❖❖

வளர்த்த கிளி வெளியே பறந்து
சென்றால் வேறு எங்கும் வாழாது.
இறைவனையும், நல்ல குருநாதனையும்
பார்த்த மனம், வேறு எங்கும்
அமைதியைப் பெறாது.

❖❖❖

சிந்தனை பழுதுபட்டிருந்தால்
"ஆன்மா"
மங்கிக்
கொண்டே
வரும்.

❖❖❖



கரி ஏறும் சிம்னி விளக்கைத்
துடைப்பது போல் விரதத்தால்
ஆன்மாவைத் துடை.

❖❖❖

பக்த கோடிகள் தங்களது
ஆன்மாவைத் துடைத்துக் கொள்ளும்
வேலையே விரதமாகும்.

❖❖❖

நெற்றிப் பொட்டு என்ற நெற்றிக்
கண்ணைக் கொண்டு சிந்தி.
சிந்தனையாளன் என்ற பெயர் வரும்.

❖❖❖

கடவுளை நினைத்து நெற்றிக்கண்
என்ற பட்டனை அமுக்கு.
அங்கிருந்தே கடவுளைப் பார்க்கலாம்.

❖❖❖

காகத்திற்கு இட்லி போடுவது போல்
உனது சிந்தனைக்கு புத்தியைப்
போடு. அது தானாக சிந்திக்கும்.
பிறகே உனக்கு "ஞானி" என்ற பட்டப்
பெயர் வரும்.

❖❖❖

பற்றி எரிகின்ற நெருப்புக் குச்சிக்கு
ஆண், பெண் வித்தியாசம்
தெரியாது. அது போன்றே "ஞானம்"
அனைவருக்கும்
பொது என்பதால், ஞானத்தைப்
பொதுவிலும், இறைவனை
அம்பலத்திலும் பார்த்தனர்.

❖❖❖

விளையாட்டைப்
பார்க்கும் பொதுமக்கள்
விளையாட்டோடு
விளையாட்டு வீரர்களையும்
ரசிக்கிறார்கள். இதுவே பக்தர்களின்
நிலை. ஆண்டவன் பக்தியோடு
பக்தர்களையும் ரசிக்கிறான்.

❖❖❖

ஓடும் நீரோடையை மனக் கண்ணால்
பார்த்துக் கொண்டே இரு.
தியானம் கைக்கூடும்.

❖❖❖

உடம்பு என்ற ஒன்று இருக்கும்
வரை உடம்பு சரியில்லை
என்கிற தத்துவமும், உண்மையும்
சரியாகவே இருக்கிறது. ஆனால்
அதே உடம்பினுள் ஆண்டவனை
வைத்துவிட்டேன் என்று சொல்லிவிடு.
அவன் மட்டும் எப்பொழுதும்
சரியாகவே இருக்கிறான்.

❖❖❖

கடவுளுக்கு இடங்கொடுக்க மனதில்
இடம் வேண்டும்
என்று நினை. எல்லாம் எளிதில்
முடிந்துவிடும்.

❖❖❖

புத்தி உள்ளவனுக்கு
புத்திசாலிகளைச் சந்தித்துக்
கொண்டிருப்பதே முக்கியம்.

❖❖❖

உலகை ஆட்டிப் படைக்கின்ற
கடவுளுக்கு உலகில்
ஆடும் பொம்மையான நானே
முக்கியம்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கீதையை படிக்க தகுதி வேண்டுமா?

# எந்த வகையான கீதையை படிக்கலாம்

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னால் எனக்கொரு ஆசை பிறந்தது பகவத் கீதையை முழுமையாக வரிக்கு வரி படிக்க வேண்டும் என்பதே அந்த ஆசை இந்த எண்ணம் தோன்றிய மறுகணமே வேறொரு கேள்வி எனக்குள் எழுந்தது பகவத் கீதை படிப்பது நல்ல விஷயம் தான் ஆனால் அதை படிப்பதற்கான தகுதி உன்னிடம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தாயா? என்பது தான் அந்த கேள்வி

கீதை படிப்பதற்கு தகுதி வேண்டுமா? காவியங்களை போல் இலக்கியங்களை போல் கீதை ஒரு புத்தகம் தானே வேண்டுமானால் அது மதத்தோடு சம்பந்தப்பட்டு இருப்பதனால் புனித நூல் என்று கருதலாம் அப்படி கருதினாலும் கூட பௌத்ததின் தம்மபதம் ஜெயினத்தின் ஸ்ரீபுராணம் இஸ்லாத்தின் அல்குரான் கிறிஸ்தவத்தின் பைபிள் போல இதுவும் ஒரு புனித நூல் தானே அவைகளை படிப்பதற்கு தனித்தகுதி தராதரம் வேண்டுமா என்ன?

ஒருவேளை என்னிடம் தகுதி என்பது சிறிது கூட இல்லாமல் இருக்கலாம் உலகத்தில் உள்ள அயோக்கியத்தனங்கள் ஒட்டுமொத்தமாக எனக்குள் இருக்கலாம். அதற்காக நான் கீதையை படிக்க கூடாது என்று சட்டம் இருக்கிறதா என்ன? அப்படியே சட்டம் இருந்தாலும் தகுதி இல்லாதவர்களிடம் தகுதியை உருவாக்குவது தானே புனித நூலின் தலையாய கடமை ஆகவே கீதை படிப்பதற்கு விசேஷ தகுதிகள் எதுவும் தேவையில்லை என்று நான் கருதினேன்

எதையும் நாம் சிந்திப்பது மட்டும் தான் சரியானது அதற்கு மற்றவர்களின் அபிப்ராயங்களை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவது மூடத்தனம் என்று எனக்கு தெரியும் அதனால் ஒரு பெரியவரிடம் எனது இந்த எண்ணத்தை தெரியப்படுத்தினேன். அவர் பொறுமையுடன் என் கருத்துக்கு செவி சாய்த்து தனது எண்ணத்தை என்னிடம் வெளிப்படுத்தினார்.

தகுதி இல்லாதவனுக்கு தகுதியை உருவாக்கி கொடுப்பது தான் கீதையின் மிக முக்கியமான நோக்கமாகும். அந்த வகையில் கொலைகாரனும் காமாந்தகனும் கூட கீதையை படிக்கலாம். அதில் தவறு இல்லை. ஆனால் எந்த வகையிலான கீதை படிப்பது என்று ஒரு சங்கதி இருக்கிறது. அதை புரிந்து தெரிந்து கொண்ட பின் கீதையை படித்தால் தான் படித்தவனுக்கும் பயனுடையதாக இருக்கும் கீதைக்கும் கௌரமாக இருக்கும் எனவே அதை உணர்ந்து கீதை படி என்று அவர் கூறினார்.

அவரின் கூற்று எனக்கு ஆரம்பத்தில் புரியவில்லை எனவே அதை கவனத்தில் வைக்காமல் கீதையை படிக்க ஆரம்பித்தேன். முதல் முதலில் மஹாகவி பாரதியார் தமிழில் மொழிபெயர்த்த கீதையை படித்தேன். அது ஒரு கவிதை நூலாகத்தான் எனக்கு பட்டதே தவிர வேறொன்றும் விசேஷமாக தெரியவில்லை. கீதை என்பது இவ்வளவு தானா? இதை போய் தான் இத்தனை பேர் புகழ்ந்து தள்ளுகிறார்களா? என்று எனக்கு தோன்றியது. அதன் பிறகு மஹாத்மாகாந்தியின் மிக நெருங்கிய சீடரான வினோபா ஜீ மொழிபெயர்த்த கீதையை எதேச்சையாக படிக்க நேரிட்டது. அந்த கீதை பாரதியாரின் கீதையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக எனக்கு தோன்றியது. அப்போது தான் அந்த பெரியவர்










யோகி ஸ்ரீ ராமானந்த குரு

சொன்ன வார்த்தையின் உண்மையான பொருள் ஓரளவு தெரிய ஆரம்பித்தது. கீதை என்பது கல்கி, குமுதம், ஆனந்த விகடனை போல் படித்துவிட்டு தூக்கி எரியும் சாதாரண புத்தகம் அல்ல அது தெய்வீகமானது அதை சொன்னவன் தெய்வம் அதை கேட்டவன் தெய்வ அம்சம் பொருந்தியவன்

தண்ணீரை திரவ பொருளாக பாக்கலாம் திடப்பொருளாகவும் காணலாம் வாயு பொருளாகவும் உணரலாம் என்பது போல கீதை என்ற தெய்வ வாக்கை சாதாரண மனிதன் தனது விருப்பத்தின் படி எப்படி வேண்டுமானாலும் அர்த்தப்படுத்தி கொள்ளலாம். மற்றவர்களை அர்த்தப்படுத்தவும் செய்யலாம் என்று தோன்றியது.

உதாரணமாக காந்தி அஹிம்சை வழியில் சென்றவர் தீவிரவாதத்தை எந்த வகையிலும் கைகொள்ளாதவர் வன்முறையால் தான் சொர்க்கமே கிடைக்கும் என்றாலும் அந்த சொர்க்கம் தேவையற்றது என்ற கருத்து உடையவர் என்று நமக்கு தெரியும். அவரும் கீதைக்கு விளக்க உரை எழுதியிருக்கிறார். அவருடைய வியாக்கியானம் எதிரிகளை அதாவது மனிதர்களை கொலை செய் உயிரை எடு என்பது போல இருக்காது கௌரவ சேனை என்பது அகங்காரத்தின் வடிவம் அதை வெற்றிகொள் என்பதாக தான் இருக்கும் என்று படிக்காமலே கூறிவிடலாம்.

பாலகங்காதார திலகரும் கீதைக்கு விளக்க உரை எழுதியிருக்கிறார். திலகர் அமைதியான வழியில் எதையும் சாதிக்க வேண்டும் என்று கருதுபவர் அல்ல வெட்டுக்கு வெட்டு குத்துக்கு குத்து என்று கோதாவில் நிற்பவர். அவருடைய விளக்கம் காந்தியை போன்ற அஹிம்சை விளக்கமாக இருக்காது என்பது நமக்கு நன்றாக தெரியும்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கீதைக்கு விளக்கங்களை கொடுத்திருக்கிற போது நம்மை போன்ற சாதாரண மனிதர்கள் எப்படி கீதையுடைய உண்மையான பொருளை உணர்ந்து கொள்ள முடியும்? அதற்கு வழி என்ன இருக்கிறது என்று நான் யோசித்தேன்.

முதலில் நாம் யார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். நாம் யார் என்று தெரிந்து கொள் என்று நான் கூற வருவது சாக்கிரட்டீஸ் போல ரமண மகரிஷியை போல தத்துவார்த்த அடிப்படையில் அல்ல. வெகு சாதாரணமாக நமது குடும்பத்தை பற்றி நமது பாரம்பரியத்தை பற்றி நமது பண்பாட்டை பற்றி ஆழ்ந்து அறிந்து அதற்கு பிறகு நாம் யார்? நமது மரபு என்னவென்று முடிவு செய்யலாம்.

முதலில் நாம் என்ன ஜாதி என்று தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும் எதற்க்காக இந்த இடத்தில் ஜாதியை பேசுகிறேன் என்றால் ஜாதி வேண்டாம் என்று பேசுபவது எல்லாம் மேடைக்கு அழகாக இருக்கும். ஆனால் நடைமுறைக்கு அது ஒத்து வராது. இந்துஸ்தானத்தில் ஜாதிகள் இல்லாத மனிதர்கள் யாருமே இல்லை. இருப்பதாக கூறுவது எல்லாம் வெறும் பொய்.

நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ எனது அனுபவத்தில் நான் பார்த்த வரையில் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனி குணங்கள் இருக்கிறது. ஆயிரம் தான் வெளிப்போர்வைகளை கொண்டு அந்த குணங்களை மூடிமறைத்தாலும் ஏதாவது வேளையில்



நம்மையும் அறியாமல் நம் ஜாதியின் தன்மை வெளிப்பட்டுவிடும். இதனால் தான் நமது பெரியவர்கள் சந்நியாசம் வாங்கினாலும் ஜாதிபுத்தி போகாது என்று கூறுவார்கள்.

அடுத்ததாக நாம் பொதுவாக இந்துக்கள் என்ற பொதுப்பெயரில் அழைக்கப்பட்டாலும் நமக்குள் சில பிரிவுகள் உண்டு அது தான் நமது இனத்தின் தனி சிறப்பாகும். எனவே நாம் சைவமா, வைஷ்ணவமா, பராசக்தியை வழிப்படுகிற சாக்தமா முருகனை வணங்குகிற கௌமாரமா, கணபதியை துதிக்கின்ற கானாபத்தியமா, சூரியனை வணங்கும் சௌரமா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

காரணம் ஒவ்வொரு இனப்பிரிவுக்கும் மதப்பிரிவுக்கும் ஏற்றவாறு கீதை விளக்கம் செய்யப்பட்டு உள்ளது. என் இயல்பை என் மரபை தெரிந்து கொண்டால் தான் எனக்கான கீதை விளக்கத்தை நான் படித்தால் எனக்கு புரியும். இல்லை என்றால் அந்நியபாஷை பேசுபவர்கள் மத்தியில் அகப்பட்டு கொண்டால் எப்படி விழிக்க வேண்டுமோ அப்படி கீதையை கையில் வைத்து கொண்டு விழிக்க வேண்டிய நிலை வரும்.

உதாரணமாக நான் மீனவன் என்றால் எனக்கு யாகம் செய்வதில் உள்ள பரிபாஷைகளை வைத்து கீதையை விளக்கினால் அடிப்படை என்ன தெரியும்? மீன் கூட்டம் வருவது




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு
செய்து படிக்கலாம்


போல ஆத்மாக்கள் பிறந்து கொண்டே இருக்கும் வலையில் அகப்படும் மீன்களை போல ஆத்மாக்கள் மறித்து கொண்டே இருக்கும் மீன்கள் வருவது போவதும் இருந்து கொண்டே இருப்பது போல உயிர்களும் இருந்து கொண்டே இருக்கும் ஒருநாளும் அது இல்லாமல் போகாது. என்று சொன்னால் தான் வலைவீசி மீன்பிடிக்கும் எனக்கு தத்துவம் தெரியும்.

இதை நன்கு உணர்ந்ததால் தான் நமது குருமார்கள் கீதைக்கு பலவிதமான பாஷியங்களை அதாவது விளக்கங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். பிரம்மம் மட்டும் தான் உலகில் உண்டு மற்ற எல்லாமே மாயை தான் இந்த அத்வைத கொள்கைக்கு ஏற்றவாறு ஆதிசங்கரர் கீதைக்கு விளக்கம் எழுதி இருக்கிறார் சிவனையும் சிவனது குடும்பத்தை சார்ந்த பார்வதி கணேசன் கார்த்திகேயன் போன்றர்களை வணங்குபவர்கள் ஆதிசங்கரரின் கீதை விளக்கத்தை எளிதாக தெரிந்து கொள்ளலாம். ஆதி சங்கரரை படித்து புரிந்து கொள்ள இயலாது என்பவர்கள் திருச்சி திருப்பாயத்துறை ராமகிருஷ்ண தபோவனத்தின் நிறுவன சுவாமி சித்பவானந்தா அவர்களின் விளக்க உரையை படித்து அறியலாம்

அதை போல திருமாலை வழிபடுபவர்கள் ஸ்ரீ ராமானுஜர் விளக்கம் செய்த பகவத் கீதையை படித்தால் சட்டென்று அவர்களுக்கு விளங்கும். ராமானுஜரை தேடி கண்டுபிடிப்பது சிரமம் என்றால் உத்திர பிரதேசம் கோரக்பூரில் இருந்து வெளிவரும் கோபால் பிரஸ் நிறுவனத்தின் கீதையை படித்தால் நல்ல பலனை அடையாளம்

மத்துவாச்சாரியார் கீதைக்கு மிக அழகான விளக்கம் தந்துள்ளார் அதை படித்தால் துவைதிகள் அதாவது கிருஷ்ண பக்தர்கள் மிக எளிமையாக கீதையை உணரலாம். மத்துவரின் நூல் கிடைக்காதவர்கள் அகில உலக கிருஷ்ண பக்த இயக்கம் வெளியிட்ட கீதையை படித்தால் சரியான விளக்கத்தை பெறலாம்.

இதை இங்கே நான் கூறுவதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு அழகான கதை சொல்லுவார் அம்மா மீன் சமைத்தால் அதை ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றவாறு பரிமாறுவாள் ஏன் என்றால் குழந்தையின் வயிற்றின் பக்குவம் தாய்க்கு தான் தெரியும். அதை போன்று தான் மகான்களுக்கு தான் பக்தர்களின் உண்மையான நிலை தெரியும். அவனவனுக்கு ஏற்ற தன்மையில் கீதையை அதனால் தான் விளக்கி இருக்கிறார்கள்.

முதலில் உங்கள் தன்மைக்கு ஏற்றவாறு உள்ள கீதை விளக்கத்தை படியுங்கள் அதன் பிறகு வேறு எத்தனை வகை விளக்கம் இருக்கிறதோ அதை தேடி தேடி ஆழ்ந்து படியுங்கள் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் மாற்றம் வரும் கீதை தானே படிக்க வேண்டும் திராவிட கட்சி தலைவர் வீரமணி கூட கீதைக்கு விளக்கம் எழுதி இருக்கிறார் அதை படிப்போமே என்று நீங்கள் படித்தால் ஏற்படும் விபரீத விளைவுகளுக்கு கீதை பொறுப்பேற்க இயலாது.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434




# நரசிம்மர்

- மகாலட்சுமிக்கு பத்ரா என்றும் ஒரு பெயர் உண்டு. இதனால் நரசிம்மனை பத்ரன் என்றும் சொல்வார்கள். பத்ரன் என்றால் மங்களமூர்த்தி என்று அர்த்தம்.
- பகவான் பல அவதாரங்களை எடுத்தாலும், அவனுடைய நாமங்கள் இறுதியில் நரசிம்மரிடத்திலேதான் போய் முடியும் என்று கருதப்படுகிறது.
- சகஸ்ரநாமத்தில் முதன் முதலாக நரசிம்ம அவதாரம்தான் இடம் பெற்றுள்ளது.
- நரசிம்ம அவதாரத்தை எதைக் கொண்டும் அளவிட முடியாது என்ற சிறப்பு உண்டு.
- ராமாயணம், மகாபாரதம், பாகவதம், 18 புராணங்கள், உப புராணங்கள் அனைத்திலும் நரசிம்மருடைய சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.
- நரசிம்ம மந்திரம் ஒரு எழுத்தில் தொடங்கி, ஒரு லட்சத்து நூற்றி முப்பத்திரண்டு என்று விரிந்து கொண்டே போய் பலன் தரக்கூடியது.
- நரசிம்மர் எங்கெல்லாம் அருள் தருகிறாரோ, அங்கெல்லாம் ஆஞ்சநேயர் நிச்சயம் இருப்பார்.
- வேதாத்ரியில் உள்ள யோக நரசிம் மர் இடுப்பில் கத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். அறுவை சிகிச்சைக்கு செல்பவர்கள் இவரை வணங்கி சென்றால் நல்ல பலன் கிடைக்கும்.

# மூதாதையர்களால் சந்ததிக்கு ஏற்படும் பிரச்சனைகள்?

ஆன்மீகத்தின்படி, நம் வாழ்க்கையில் 50% துன்பங்கள் முற்றிலும் ஆன்மீக காரணங் களாலும், 30% துன்பங்கள் ஆன்மீகம் மற்றும் உளவியல் மற்றும்/அல்லது உடல் சம்பந்தமான காரணங்களாலும் ஏற்படுகின்றன. இது நவீன விஞ்ஞானத்தால் அறியப்படாத விஷயம்.

தயவுசெய்து ‘வாழ்வில் ஏற்படும் கஷ்டங் களின் ஆன்மீக மூல காரணங்களின் பகுத் தாய்வு’ என்ற கட்டுரையை பார்க்கவும்.

ஆன்மீக மூல காரணங்களால் நம் வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களின் ஒரு அம்சம், இறந்து போன மூதாதையர்களின் சூட்சும உடலால் சந்ததியினருக்கு ஏற்படும் கஷ்டங்களாகும். இது மனிதகுலத்தில் பெரும்பாலானவர்களை ஏதாவது ஒரு வகையில் பாதிக்கும் பொதுவான ஆன்மீக காரணங்களில் ஒன்றாகும். நம் மூதாதையர்கள் நமக்கு ஏன் கஷ்டங்களை கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி விரிவாக தெரிந்து கொள்வதற்கு முன்பு, எந்த விதமான துன்பங்களை நம் மூதாதையர்களால் அனுபவிக்கிறோம் என்பதை முதலில் சற்று ஆராய்வோம்.

மூதாதையர்களின் சூட்சும உடல்களால் ஏற்படும் கஷ்டங்கள், பல விதங்களில் நம் அன்றாட வாழ்வில் உபாதைகளாக பரிணமிக் கிறது. இது நம் ஆன்மீக பயிற்சியிலும் உலக வாழ்க்கையிலும் தடங்கல்களை ஏற்படுத்து கின்றன.

சில சமயங்களில் இது முழு குடும்பத்தை சுற்றி கருமேகம் படர்ந்தாற் போல் இருக்கும். அவற்றை சமாளிக்க எல்லா முயற்சியும் எடுத்தும் ஒவ்வொரு குடும்பத்தினரும் பல விதமான பிரச்சனைகளை சந்திக்கின்றனர். இறந்த மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்கள் கீழே கூறியுள்ளபடி பலவிதங்களில் வெளிப் படுகின்றன.

- திருமணம் ஆகாமல் இருப்பது
- தாம்பத்ய வாழ்க்கையில் சண்டை சச்சரவு
- போதைக்கு அடிமை ஆவது மூதாதையர்களின் ஆவி அவர்களின் வழிவந்தவர்களின் மூலம் போதைப் பொருளை அனுபவிப்பதால் ஏற்படுகிறது)
- நன்றாக தயார் செய்திருந்தாலும் தேர்வில் எல்லாமே மறந்துபோவது
- வேலை பறிபோவது
- குழந்தைப் பேறு இல்லாமல் போவது
- கருச்சிதைவு
- மனநலம் குன்றிய குழந்தை பிறத்தல்
- குழந்தைப் பருவத்தில் இறப்பது

மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்களோடு தீவிர ஆன்மீக காரணங்களும் (விதிப்படி மரணம் சாத்தியமாகும் காலம்) இணைவதால், கருச்சிதைவு, குழந்தைப் பருவத்தில் இறப்பது போன்ற துன்பங்கள் ஏற்படுகின்றன. இவை மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்களால் மட்டுமே ஏற்படுவது இல்லை. மேலே கூறப்பட்ட பிரச்சனைகள் மூதாதையர்களால் ஏற்படும் கஷ்டங்களின் வலுவான அறிகுறிகளாக இருந் தாலும், இப்பிரச்சனைகளின் உண்மையான மூல காரணத்தை ஒரு மகான் அல்லது ஒரு குருவால் (ஆன்மீகத்தில் முதிர்ச்சி அடைந்தவர்) மட்டுமே கூற முடியும்.



அறிவு சார்ந்த மட்டத்தில், கஷ்டங்கள் ஆன்மீக காரணங்களால் ஏற்படுகின்றது என்பதை கீழ்க்கண்ட குறிப்புகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்:

- எந்த வைத்திய முறையும் பலன் அளிக் காத போது. குறிப்பாக, நவீன விஞ்ஞான முறைப்படி எளிதாக சிகிச்சை அளிக்கக் கூடிய தோல் சம்பந்தமான வியாதிகள், மார்பு வலி போன்ற வியாதிகள் இதில் அடங்கும்.
- அதிகபட்ச குடும்பத்தினர் (5 நபர்கள் உள்ள குடும்பத்தில், 4 நபர்கள்) மேற்கூறப் பட்ட உபாதைகளால் ஒரே சமயத்தில் அவதிப்படுவது. (இதன் காரணம், ஒரு குடும்பத்தை சேர்ந்த எல்லாருக்குமே அதே மூதாதையர்கள் இருப்பதுதான்.)

## பித்ருபக்ஷம்

மூதாதையருக்கு திவச காரியம் செய்யாத தால் அவர்கள் திருப்தி அடையாததாலும், அத்துடன் தீய சக்திகளின் கட்டுப்பாட்டின் கீழ் சென்று அவற்றிற்கு அடிமையாக இருப்பதாலும், தீய சக்திகள் மூதாதையரை உபயோகித்து குடும்பத்தினருக்கு கஷ்டங்கள் அளிக்கும் வாய்ப்பு உள்ளது. திவசம் செய்வதால் மூதாதையருக்கு பாதுகாப்பு கிடைக்கிறது; கதி கிடைத்து மேலே செல்ல முடிகிறது. பித்ருபக்ஷ காலத்தில் ஒரு நாள் மூதாதையருக்கு திவசம் செய்தால் அவர்கள் வருடம் முழுவதும் திருப்தியுடன் இருக்கிறார்கள்.

## சர்வபித்ரு அமாவாசை

ஆவணி மாத அமாவாசையை ‘சர்வ பித்ரு அமாவாசை’ என்பர். அன்று அவரவர் குலத் தை சேர்ந்த அனைத்து மூதாதையருக்கும் ஸ்ரார்த்தம் செய்யப்படுகிறது. வருடத்தின் மற்ற திதிகளில் அல்லது மகாளய பட்ச மற்ற திதிகளில் ஸ்ரார்த்தம் செய்ய முடியவில்லை என்றாலும் அமாவாசை அன்று அவசியம் செய்வார்கள்.

## பித்ருபக்ஷத்தில் தத்த நாமஜபம் செய்வதன் மகத்துவம்

தத்த நாமஜபத்தால் மூதாதையருக்கு நல்ல கதி கிடைக்கிறது; அதோடு கஷ்டத்திலிருந்து பாதுகாப்பு கவசம் ஏற்படுகிறது. அதனால் பித்ருபக்ஷ காலத்தில் தினமும் குறைந்தபட்சம் 72 மாலைகள் (6 மணி நேரம்) தத்த நாமஜபம் செய்ய வேண்டும். இந்த வருடம் சர்வமகாளய அம்மாவாசை 17 செப்டம்பர் (ஆவணி அம்மாவாசை) வியாழன் வருகிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

# ராமதாசர் எழுதிய நூல்கள்



## நூல்கள்

இவர் மஹாராஷ்டிர பாஷையிலும், ஸம்ஸ்கிருதத்திலும் பல நூல்கள் எழுதியிருக்கிறார், அவை தாஸபோதம், பஞ்சீகரணம், பீமரூபிசுலோகம், கருணாஷ்டகம், அமிருதகம், அமிருத பிந்து ராமாயணம் ஆகியவை. இந்த நூல்களைத் தவிர ஏராளமான கீர்த்தனங்கள், அபங்கங்களும் எழுதியிருக்கிறார். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும், கண்ணனும் உபதேசித்த கர்மபக்தி யோகங்களை தேச பக்தியுடன் சேர்த்து உபதேசித்தவர் ஸ்ரீ சமர்த்தர்.

## தாசபோதம்

ராமதாசர் தாஸபோதம் என்ற நூலை எழுதினார். அந்நூலை சிவாஜிக்கு அளித்தார். அரசியலில் இருந்து ஆத்மா வரை வழிகாட்டும் நூல் அது என்பர். ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமி தாஸபோதம் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்.

ஸாமர்த்திய ஆஹே சல்வளீசே |
ஜோ ஜோ கரீல த்யாசே |
பரந்து யேதே பகவந்தாசே|
அதிஷ்டான் பாஹிஜே |

அர்த்தம்: போராட்டத்தை நடத்துவது நம் கைகளில் உள்ளது; ஆனால் காரியம் சரியாக நடப்பதற்கும் வெற்றி காண்பதற்கும் பகவானின் ஸங்கல்பம் மற்றும் ஸாதனை அவசியமாகிறது.

“இதை நீ படிப்பாய் அப்போது உன்னுள் பெரும்தெளிவு ஏற்படும். உனக்குள்ளும் அரிய சிந்தனைகள் தோன்றும். ஆழ்ந்து இதில் கூறியுள்ளபடி நீ நடந்தால், என் குருவான அனுமனும் உனக்கு எல்லா உதவிகளும் நேரில் தோன்றிச் செய்வார்” என்றார். சிவாஜியும் வாசித்தான்.

தாசர் சொன்னபடி புதிய பல சிந்தனைகள் அவனுக்குள் எழுந்தன. அதையெல்லாம் குறித்துக் கொண்டான். சக அமைச்சர்களிடமும் பகிர்ந்து கொண்டான். சிவாஜியின் இந்த போக்கு அரசவைப் பண்டிதரான “காகாஜி’ என்பவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவர் சிவாஜியிடம், “மன்னா நாட்டில் அறநூல்களும், நீதிநூல்களும் எவ்வளவோ உள்ளன. ஆனால் நீங்கள் இந்த ராமதாசர் தந்ததை பெரிதாகக் கருதி பின்பற்றுகிறீர்கள். இதனால் மற்ற நூல்கள் மதிப்பில்லாததுபோல கருதப்படும். நீர் செய்வது பிழை” என்றார்.

ஆனால் அதை சிவாஜி ஏற்கவில்லை.

“பண்டிதரே நீங்கள் பொறாமையால் பேசுகிறீர்கள். இதை நீங்கள் மனம் ஒருமித்து வாசியுங்கள்; தெரியும்” என்றான் சிவாஜி. ஆனால் காகாஜி பண்டிதர் அதை கேட்காமல் சிவாஜியைவிட்டே பிரிந்துவிட்டார். இந்த செய்தி ராமதாசருக்குப் போய்ச்சேர்ந்தது. மனம் வருந்திய ராமதாசர் ஒரு பெரும் பக்தமேளாவுக்கு ஏற்பாடு செய்து, அதற்கு காகாஜியை வரும்படி கூறி ஓலை அனுப்பினார்.

காகாஜியின் அந்த ஓலையை லட்சியம் செய்யவில்லை. இந்நிலையில் யார் அழைத் தால் காகாஜி வருவார் என்று ராமதாசர் யோசித்தபடி இருக்க, அவர்முன் அனுமன் தோன்றினான்.



எஸ்.ரகுராமன்

“ராமதாசா கவலையைவிடு. நானே நேரில் சென்று பண்டிதனை அழைக்கிறேன். அவன் உன்மேல்தான் பொறாமை கொண்டவன். உண்மையில் அவனொரு நல்ல ராமபக்தன். ராமபக்தர்கள் எனக்கும் பக்தர்கள். அவர்கள் தம்முள் பிரிந்துகிடக்கக் கூடாது” என்று கூறிவிட்டு, ஒரு பண்டிதன் வேடத்தில் அனுமன் காகாஜி வீட்டை அடைந்தான். ராமதாசர் அனுப்பியதாகவும் கூறினான்.

காகாஜி காதுகொடுத்தே கேட்கவில்லை.

காகாஜியின் செயல் அனுமனுக்கு கோபத்தை வரவழைக்கவே, அங்குள்ள ராமபிரான் படத்தைப் பார்த்து அவர்முன் அனுமன் வடிவில் தோன்றி, “ப்ரபோ என் சீடனுக்காக அவன் குருவான நான் வந்தும் இந்த பண்டிதன் கேட்கவில்லை. எனக்காக நீங்கள் வந்தாலே இவன் கேட்பான். அருள் கூர்ந்து வாருங்கள்” என்ற மாத்திரம், அங்கே ராமன் கோதண்டத்தோடு பிரசன்னமானான்.

அதைக்கண்ட காகாஜி பண்டிதர் வெலவெலத்துப் போனார்.

சமர்த் ராம்தாஸ் சுவாமிபுகழ் பற்றி கேள்விப் பட்டதும் பார்க்க மிகவும் ஆர்வமாக இருந்தார். எனவே, அவரைச் சந்திக்க கோந்தாவல் இடைவெளிக்குச் செல்ல முடிவு செய்தார். சிவாஜி மகாராஜ் அங்கு சென்று மாலை வரை காத்திருந்தார், ஆனால் சுவாமிஜியை சந்திக்க முடியவில்லை. பின்னர் மகாராஜ் பிரதாப்காட் திரும்பினார், தூக்கத்தில் கூட சமர்த் ராம்தாஸ் சுவாமியை சந்திப்பது பற்றிய அதே எண்ணம் அவரது மனதில் சுழன்று கொண்டிருந்தது. உண்மையில், சமர்த் ராம்தாஸ் சுவாமி சிவாஜி மகாராஜை வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்டிருந்தார். சில நாட்கள் இதேபோல் கடந்துவிட்டன. ஒரு நாள் சமர்த்தைச் சந்திக்க வேண்டும் என்ற ஏக்கம் பெரிதும் அதிகரித்தது, சிவாஜி மகாராஜ் பவானி தேவி கோவிலுக்குச் சென்றார், இரவில் அவர் தேவியின் முன் தூங்கிவிட்டார். அன்று இரவு அவர் சமுகா ராம்தாஸ் சுவாமியின் கதிரியக்க வடிவமான படுகா (மர செருப்புகள்), ஒரு குங்குமப்பூ அங்கி, கையில் ஒரு ஜப்மலா (மணிகள் முழங்குவது) மற்றும் அவரது அக்குள் கீழ் ஒரு ஊன்றுகோல் ஆகியவற்றைக் கொண்டிருந்தார். சிவாஜி மகாராஜ் சமர்த் ராம்தாஸ் சுவாமிக்கு வணங்கி அவருக்கு வணக்கம் செலுத்தினார். ராமதாஸ் சுவாமி மகாராஜின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார். மகாராஜ் காலையில் எழுந்தபோது, அவர் கையில் ஒரு தேங்காய் ஒரு சடங்காக இருப்பதைக் கண்டார். அன்றிலிருந்து, சிவாஜி மகாராஜ் சமர்த் ராம்தாஸ் சுவாமியை தனது குருவாகக் கருதத் தொடங்கினார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

**சமர்த்த ராமதாசர் வரலாறு (பாகம்-5)**

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# அதிக சக்தி வாய்ந்த கோவில்கள் எவை?

## சாஸ்திரம் கூறும் விளக்கம்

கோவில் என்றாலே அது சக்தி வாய்ந்த இடம் தான். அதிலும் குறிப்பாக சில கோவில்கள் அதிக வலிமை உள்ள சக்திகளைப் பெற்று விளங்கும். அந்த கோவில்களை எல்லாம் கண்டுபிடிப்பது அனுபவம் மிக்கவர்களால் மட்டுமே முடியும். அதிக தெய்வீக சக்தி நிறைந்துள்ள பல கோவில்கள் தமிழகத்தில் உள்ளது.

அந்த வகையில் எந்த கோவில்களில் அதிக சக்தி இருக்கும்? என்பதை சில விஷயங்களை வைத்து நம்மால் கண்டுபிடிக்க முடியும். அதை எப்படி கண்டுபிடிக்க வேண்டும்? எந்த கோவிலில் அதிக சக்தி இருக்கும்? என்பதை எளிதாக தெரிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு விசேஷ வரலாறுகளும், விருட்சங்களும் உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்தது தான். ஸ்தல புராணமும், வரலாறு போன்றவையும் ஆதிகாலம் முதல் மிகவும் அற்புதம் வாய்ந்த வையாக திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு புராணத்தை கேட்கும் பொழுதும், அங்கு விஞ்ஞானிகள் வியக்கும் வண்ணம் அமைந்துள்ள சிற்பக் கலைகளை பார்க்கும் பொழுதும் மெய் சிலிர்த்துப் போகிறது அல்லவா?

சில கோவில்களுக்குள் சாதாரணமாக நம்மால் சென்று வந்துவிட முடியும். ஆனால் ஒரு சில கோவில்களுக்கு செல்லும் பொழுதே உடலில் ஒருவித நல்ல அதிர்வுகள் உண்டாகும். இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? சென்று வீட்டிற்கு வந்த பின்னால் மனம் அமைதியுடன் ஒருநிலையில் இருக்கும். எதைப் பற்றிய சிந்தனையும் அந்த நேரத்தில் நமக்கு வராது அத்தகைய கோவில்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை.

கோவில் என்றாலே விருட்சமும் நிச்சயம் இருக்க வேண்டும். விருட்சம் இல்லாத கோவில்கள் அவ்வளவு சக்தி உடையதாக இருப்பதில்லை. பழங்காலக் கோவில்களில் இருக்கும் ஸ்தல விருட்சம் தனி மதிப்புடையது. விருட்சத்திற்கு வழிபாடுகளும், பூஜை, புனஸ்காரங்கள், ஆராதனைகளும், அர்ச்சனைகளும் கூட செய்யப்படுவது உண்டு.

தெய்வ சிலைகள் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு அந்த ஸ்தலத்தில் இருக்கும் ஸ்தல விருட்சமும் மிகவும் முக்கியமான ஒன்று. விருட்சத்தை சுற்றிலும் புற்று எழுந்தருளியிருப்பது இன்னும் விசேஷ சக்தி பெற்றது. அவற்றை எல்லாம் மனிதன் உருவாக்குவது கிடையாது. மனித அறிவுக்கு எட்டாத, கண்களுக்கு புலப்படாத அபூர்வ சக்திகள் இருப்பதற்கு சான்றாக இது போன்ற விஷயங்கள் எப்போதும் இருக்கின்றன என்பது மறுக்க முடியாதது.



கோவில் என்றால் எப்படி விருட்சம் இருக்க வேண்டுமோ, அதே போல் தான் கொடி மரமும் கட்டாயம் இருக்க வேண்டும். கொடிமரம் இருக்கும் கோவில்கள் எல்லாம் அதிக சக்தி வாய்ந்தவையாக சாஸ்திரம் கூறுகிறது. தெய்வ விக்ரகங்களுக்கு எப்படி நாம் தரிசனம் பெற்று ஆசி வாங்கி வருகிறோமோ, அதே போல கொடி மரத்தை தொட்டு வணங்குவது மிகவும் நல்ல பலன்களை தரும் என்பார்கள்.

கோயிலை விட்டு எப்போதும் வெளியேறும் பொழுது கொடி மரத்தை தொட்டு வணங்கி விட்டு தான் வெளியேற வேண்டும் என்பார்கள். வேத ஆகம முறைப்படி கொடிமரம் அமைக்கப்பட்டிருப்பது விசேஷ சக்திகளை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றது.

அத்தகைய கொடிமரம் இருக்கும் கோவில்கள் அதிக சக்தி கொண்டிருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கூறலாம். கொடிமரம் மற்றும் ஸ்தல விருட்சம் அமைக்கப்பட்டிருக்கும் கோவில்கள் அதிக சக்தி வாய்ந்தவையாக சாஸ்திரம் குறிப்பிடுகிறது. இந்த மாதிரியான கோவில்களில் விளக்கேற்றினால் அதிக நன்மைகளை உண்டாக்கும்.

ஆன்மீகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆன்மீக வழியில் அமைதி...

உலகில் வாழும் பெரும்பாலான மக்கள் மனதிற்குள் விரும்புவது, தேடுவது அமைதியான வாழ்க்கை ஆகும். தாங்கள் விரும்பும் அமைதியை வாழ்க்கையில் அடைவதற்கு மனிதர்கள் பலவழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

மக்களில் பெரும்பான்மையினர் போதியளவில் தங்களிடம் சொத்துக்கள் மற்றும் பணம் இருந்தால், கவலையில்லாமல் சுகமாக இன்பமாக அமைதியாக வாழலாம் என்று நினைக்கிறார்கள், நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே மக்கள் வசதியாக வாழ்வதற்கு பணம் சம்பாதிப்பதற்குப் பல வழிகளில் முயற்சி செய்கிறார்கள். சிலர் நேர்மையாக உழைத்து பணத்தை சம்பாதிக்கிறார்கள். பலர் உடல் உழைப்பு இல்லாமல் மற்றவர்களை ஏமாற்றியும், நேர்மையற்ற முறைகளில் பணத்தை சம்பாதிக்கிறார்கள்.

அவ்வாறு பணத்தை சேர்த்து வைத்தபின்பும் திருப்தியடையாமல் , அடுத்த தலைமுறைக்கும் பணத்தை சேர்த்து வைப்பதற்கு நினைக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் பணம் இருந்தால் இவ்வுலகில் நிம்மதியாக ஆனந்தமாக வாழலாம் என்று நினைக்கிறார்கள். பணம்தான் வாழ்வில் அமைதி கொடுக்கும் என்றால் உலகில் வாழும் பணம்படைத்தவர்கள் எல்லாம் எந்தவிதக் கவலையும் இல்லாமல் அமைதியாக வாழ்கிறார்களா? என்று சிந்தித்துப் பார்த்தால் ‘இல்லை’ என்றுதான் கூறவேண்டும்.

இந்த உலகத்தில் வசதியுள்ள பணம்படைத்தவர்கள் எல்லாம் கவலையில்லாமல் சுகமாக வாழ்வது போல் நமக்குத் தோன்றும். அப்படிப்பட்ட பணம்படைத்தவர்களை சிலரை நாம் அணுகி கலந்து பேசிப்பார்த்தால், அவர்கள் வாழ்க்கையில் மனம் அமைதியற்ற நிலையில் நிம்மதியின்றி இருப்பது நன்றாகவே நமக்குப் புரியும். பணம் சொத்து பற்றி சிந்தித்துப் பார்த்தால் அளவோடு பணம் இருந்தால், பணத்திற்கு மனிதன் எஜமானாக இருப்பான். பணம் அளவுக்கு அதிகமாக இருந்தால் பணந்தான் அவனுக்கு எஜமான்போல் இருக்கும். பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகம் இல்லை, அருள் இல்லாதவருக்கு எவ்வுலகமும் இல்லை என்று பேச்சுவழக்கில் கூறுவார்கள். பொருள் உள்ளவர்களுக்கு இவ்வுலகம் இருக்கும், ஆனால் அவர்களுக்கு வாழ்க்கையில்...? அவர்கள் தேடும் விரும்பும் மனஅமைதி கிடைக்குமா? என்பது பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.



உலகில் அதிகப்பணம் வைத்திருப்பவன்கூட திருப்தியடையாமல் போதுமென்ற மனமில்லாமல் மென்மேலும் பணத்தினைச் சேர்ப்பதற்கும், சேர்த்தப்பணத்தினைப் பாதுகாக்கவும் அல்லும்பகலும் கவலைப்பட்டுக்கொண்டும்தான் இருக்கிறான். அவன் மனநிம்மதியற்ற நிலையில்தான் இயந்திர வாழ்க்கைபோல் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். அவனுக்கு எப்படி அவனுடைய வாழ்வில் அவன் தேடும் அமைதி கிடைக்கும். ஒருவனுக்குப் பணம் இருந்தால் நினைத்ததை எல்லாம், விரும்பியதெல்லாம் வாங்கலாம் வசதியாகவும் வாழலாம். ஆனால் அவன் சேர்த்து வைத்திருக்கும் பணத்தின் மூலம் அவன் விரும்பும், தேடும் மனஅமைதியையோ நிம்மதியையோ வாங்கவோ, அமைதியுடன் வாழவோ முடியாது. பணம் சம்பாதிப்பதே தங்கள் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டவர்கள் இதனை நன்கு உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் பணத்திற்காக உலகில் இப்படி பேயாய் அலையமாட்டார்கள்.

மனிதன் உலகம் போற்றும் உயர்பதவியில் இருந்தால், வாழ்க்கையில் அமைதியாக கவலையின்றி சுகமாக வாழலாம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மனிதர்கள் தங்களுக்குகென்று பதவியைத்தேடி அலைந்து, நேர்வழியிலோ குறுக்குவழியிலோ கஷ்டப்பட்டு உயர் பதவியில் அமர்ந்து கொள்கிறார்கள். ஆனால் அப்படி உயர்பதவியில் இருப்பவர்களும் இரவும்பகலும் மனஅமைதி கிடைக்காமல் உலகில் கஷ்டப்படுவதை நாம் பலரையும் காணுகிறோம். எடுத்துக்காட்டாக உயர்பதவியில் இருக்கும் மாவட்ட ஆட்சியருக்கு, அதிகாரிகளும் அந்த மாவட்டத்தில் வசிக்கும் மக்களும் உரிய மரியாதை





செலுத்துகிறார்கள் . அதனால் அந்த மாவட்ட ஆட்சியரும் அவர் குடும்பமும் அவற்றைக் கண்டும் கேட்டும் மகிழ்ச்சியும் பெருமையும் அடையலாம். மாவட்ட ஆட்சியர் கட்டளைகளையெல்லாம் அவருக்குக்கீழ் பணிபுரியும் அதிகாரிகள் நிறைவேற்றக் காத்திருப்பார்கள். மாவட்டத்தில் அவர் எங்கு சென்றாலும் பொன்னாடைகள், மாலைகள் மரியாதைகள் அனைத்தும் கிடைக்கும். ஆனால் அவர் ஒருநாள்கூட நிம்மதியாக மன அமைதியுடன் தனது வீட்டில் தூங்கி இருக்கமாட்டார்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பணம் படைத்தவர்களும் உயர்பதவியில் இருப்பவர்களும் தங்களிடம் உள்ள பணத்தின் மீதும் உயர் பதவியின் மீதும் பற்று இல்லாமல் இருந்து ஆன்மீக வழியில் செயல்பட்டால் மன அமைதியுடன் வாழலாம். பணம் படைத்தவர்களும் பதவியில் இருப்பவர்களும் பற்றற்று ஆன்மீகத்தில் நாட்டம்கொண்டு செயல் புரிந்தால் மன அமைதி அவர்களை நாடி வரும். இதனைத்தான் கீதையில் கடமையைச் செய் பலனைப் பற்றி கவலைப்படாதே என்று கிருஷ்ண பகவான் கூறியுள்ளார்.

ஒரு குடிசையில் வசிக்கும் ஏழைத்தொழிலாளியாக இருப்பவன், நன்கு உழைத்து அதனால் கிடைக்கும் கூலியைக்கொண்டு தனக்குக் கிடைக்கும் கஞ்சியை குடித்துவிட்டு குடிசையில் நிம்மதியாகத் தூங்குவான். உயர்பதவியில் இருப்பவன், பணம் படைத்தவன் இரவில் மாடமாளிகையில் சொகு சான பஞ்சுமெத்தையில் படுத்திருந்தாலும்அவன் நிம்மதியாகத் தூங்காமல் நிம்மதியின்றி படுக்கையில் புரண்டு கொண்டுதான் இருப்பான். இதேபோன்றுதான் உயர் பதவியில் இருப்பவர்களும் ஏதோ ஒருவிதத்தில் அமைதியற்ற சூழ்நிலையில்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். சமூகத்தில் உயர்பதவியில் இருப்பவர்கள் அந்தப் பதவியை விட்டுவிட மனமில்லாமலும், அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும் இரவும்பகலும் கவலைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு மன அமைதி என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. பணமாக இருந்தாலும் பதவியாக இருந்தாலும் அவற்றின்மீது அவன் பற்று இல்லாமல் தாமரையிலைத் தண்ணீர்போல் இருந்தால் அவன் தேடும் அமைதி ஆன்மீக வழியில் கிடைக்கும்.

உலகில் பேரும்புகழும் அடைந்துவிட்டால் மனிதன் மன அமைதியுடன் வாழலாம் என்று நினைத்தால், அப்படிப் பேரும்புகழும் அடைந்தவர்கள் அதனைத் தக்க வைத்துக்கொள்வதற்கு அல்லும் பகலும் சிந்தித்துக்கொண்டே அமைதியின்றி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பேரும்புகழும்வேண்டுமானால் அவர்களுக்கு சமூகத்தில் ஒருவிதமான மரியாதை மற்றும் அடையாளம் வேண்டுமானால் கிடைக்கலாம்.

அதனால் அவர்கள் பேரும்புகழுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதுபோல் மற்றவர்களுக்குத் தோன்றும். ஆனால் அவர்கள் விரும்பிய மனஅமைதி பேரும் புகழினால் கிடைக்குமா? என்று சிந்தித்துப் பார்த்தால் அவர்களுக்கும் வாழ்க்கையில் மனஅமைதி என்பது கிடைக்காது. இந்த உலகத்தில் மனிதர்களுக்கு பணம், பட்டம், பதவி மற்றும் புகழ் கொடுக்காத மன அமைதியை வாழ்வில் நிம்மதியை ஆன்மிகம் தருகிறது. ஆன்மிகம் என்றால் துறவுநிலை என்று பலர் தவறாக நினைத்துக்கொண்டு பயந்து ஆன்மிகம் என்றாலே பின்வாங்கி விடுகிறார்கள். ஆன்மீகத்தை யார் முறையாக படித்தும் கேட்டும் அறிந்தும் அதன்படி சமூகத்தில் செயல்பட்டு வாழ நினைக்கிறார்களோ, அவர்களது உடலுக்கு ஆரோக்கியமும், உள்ளத்திற்கு அமைதியும் கிடைக்கிறது. ஆன்மீகவாதிகள் மேடையிலோ கோவிலிலோ பேசக்கூடிய பயனுள்ள ஆன்மீக கருத்துக்களை மக்களில் சிலர் காதில் போட்டுக்கொள்வார்கள்.

ஆனால் அதனை மனதில் நன்கு பதியவைத்து, தங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து தங்களது வாழும்நிலையை மாற்றுவதற்கு எந்தவிதத்திலும் முயற்சியை மேற்கொள்வதில்லை. மக்களில் சிலர், ஆன்மீக கருத்துக்களை நூல்கள் மூலம் படித்து தெரிந்து கொள்வார்கள். புத்தகங்களை படித்து ஆன்மீகக் கருத்துகளை அறிந்து கொள்வதன் மூலம் மனதிற்குள்ளேயே மகிழ்ச்சியும் அடைவார்கள். அப்படி மகிழ்ச்சியுடன் இருப்பதோடு சிலர் ஆன்மீகவழியில் செல்வதற்கும் விரும்புவார்கள். ஆனால் அவர்கள் நன்கு ஆன்மீகக் கருத்துக்களைப் புரிந்துகொண்டாலும், அதன்படி அவர்கள் செயல்படுவதற்கு மிகவும் தயங்குவார்கள்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

சந்தா இல்லை

நன்கொடை இல்லை

வெற்றிகரமாக

# 100வது இதழை நோக்கி

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,

தரத்திலும், வடிவமைப்பிலும்

## நம்பர் 1 இணைய இதழ்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் மாதம் இரண்டு இ-புத்தகமாக வெளிவரும் நமது இதழின்

**100வது இதழ் 100 பக்கங்களுடன்**

இதுவரை வெளி வந்த முக்கிய ஆன்மிக தகவல்களுடன் பொக்கிஷமாக வெளிவரவிருக்கிறது...

## பாதுகாக்க வேண்டிய பொக்கிஷத்தை விரைவில் எதிர்பாருங்கள்....

**www.aanmeegamalar.com** இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்.